www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 15 | ஒக்டோபர் 2006 | பக்கம் 12 | விலை 15/- | சுழற்சி 96

# தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்றும் சதிகள்




**இரத்தினபுரி, கீரகலை தோட்டத்தில் தொழில் செய்பவர்களை அவர்கள் குடியிருந்து வரும் லயன் அறைகளிலிருந்தும், தோட்டத்திலிருந்தும் தோட்ட நிர்வாகம் பலாத்காரமாக வெளியேற்றி வருகிறது. அத்தோட்டம் உடபுஸ்ஸல்லாவை பிளான்டேசன் கம்பனியால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அந்த பலாத்கார வெளியேற்றத்தை எதிர்த்தவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். தோட்ட அதிகாரிகளும், அலுவலர்களுமே அவ்வாறு தாக்கியுள்ளனர்.**

தோட்டக் குடியிருப்புக்களில் நீண்ட காலமாக குடியிருந்து வரும் ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர்களும், அவர்களது வழித் தோன்றல்களும் அவர்களின் குடியிருப்புக்களிலிருந்து பலாத்காரமாக எவ்வித நீதிமன்ற உத்தரவுகளுமின்றி வெளியேற்றப் பட்டுள்ளனர். அப் பலாத்கார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவியாக கிராமப்புறங்களிலிருந்து சிங்கள இனத்தைச் சேர்ந்த காடையர்களை பயன்படுத்துவதாக தெரிகிறது. பலாத்கார வெளியேற்ற நடவடிக்கைகளை எதிர்த்தால் இனவாத மோதலை ஏற்படுத்தலாம் என்ற நோக்கிலேயே அவ்வாறு தோட்ட நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.


தோட்டத்தில் வேலை செய்தாலும் செய்யா விட்டாலும் தோட்டக் குடியிருப்புக்களில் குடியிருந்து வருபவர்களுக்கே அவை சொந்தமென்றும், அக் குடியிருப்புக்களிலிருந்து ஒரு போதும் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்றும் மலையக (பெருந்தோட்ட) தொழிற்சங்கத் தலைவர் தொடர்ந்து கூறிவருகின்றார். அவ்வாறு வெளியேற்றப்படமாட்டார்கள் என்று தோட்ட நிர்வாகங்களோ, அரசாங்கமோ சட்ட ரீதியாக செல்லுபடியான வாக்குறுதி எதனையும் வழங்கவில்லை.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றவுடன் தோட்டக் குடியிருப்புக்களை தோட்ட நிர்வாகத்திடம் மீள ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கா விட்டால் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து அக் குடி யிருப்புக்களில் இருப்பவர்களை வெளியேற்ற முடியும்.

தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களை ஆக்கியவர்கள். தோட்டங்களில் ஆரம்ப காலத்திலிருந்து பிரிட்டிஷ்காரர்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட லயன் அறைகளில் அடைத்து வைக்கப் பட்டவர்களாகவே இருந்து வந்தனர். பரம்பரை பரம்பரையாக தோட்டங்களில் யாராவது ஒருவர் தொடர்ந்து வேலை செய்து வந்ததால் தோட்டக்

தொடர்ச்சி 11ம் பக்கம் ⇨

# வடக்கு கிழக்கைப் பிரிக்க வாக்கெடுப்பு?



**த**மிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையில் வடக்கு கிழக்கு இணைப்பு என்பது மிகவும் அத்திவார மானது. அரசியல் தீர்வொன்று காணப்படுமிடத்து அதனை மறுப்பதற்கான பல பக்க நடவடிக்கைகளையும் பேரினவாத சக்திகள் எடுத்துவருகின்றன. அந்நடவடிக்கைகளுக்கு சிகரம் வைத்தாற் போல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அறிவிப்பு அமைந்துள்ளது. கிழக்கு மாகாண மக்களின் எதிர்காலத்தை பற்றி அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் வகையில் வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் தொடர்ந்து இணைந்து இருப்பதா இல்லையா என்பதை முடிவு செய்து கொள்வதற்காக பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரித்தானிய பாதுகாப்பு கற்கைகள் குழுவினர் ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்தபோது அவர் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து இணைந்திருக்க

தொடர்ச்சி 7ம் பக்கம் ⇨



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பசுமலையில் இன்னுமொரு சிசு மரணம்

பசுமலை உருளவளி மேற்பிரிவில் உரியநேரத்தில் கர்ப்பிணித் தாயொருவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லாதபடியால் குழந்தை இறந்த நிலையில் பிரசவிக்கப் பட்டுள்ளது. குறிப்பிட்ட தாய் மிகவும் ஆபத்தான நிலைக்கு முகம் கொடுத்துள்ளார். நோயாளிகளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல அம்புலன்ஸ் அல்லது லொறி வசதிகளை தோட்ட நிர்வாகங்கள் செய்து கொடுக்கக் கடமைப்பட்டுள்ளனர். தற்போது அதிகமான தோட்டங்களில் வாகன வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் நோயாளிகள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படாத நிலையில் அல்லது நேரம் தாழ்த்தி எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர். இரண்டு மாதங்களிற்கு முன்பு ஹட்டன் வெலிஓயா தோட்டத்தில் உரிய நேரத்தில் கர்ப்பிணித் தாயொருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படாததால் மரணமடைந்தார்.

இவ்வாறு பிரசவ நேரத்தில் தாய்மாரின் மரணங்களும், சிசு மரணங்களும் அதிகரித்துள்ளன. தோட்டங்கள், தனியார் கம்பனிகளால் பொறுப்பேற்கப்பட்ட பிறகு அதிகமான சிறிய தோட்ட வைத்தியசாலைகளும் மகப்பேற்று மனைகளும் மூடப்பட்டுள்ளன. அல்லது கைவிடப்பட்டுள்ளன. கர்ப்பிணித் தாய்மார்களை உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல தோட்ட நிர்வாகங்கள் வாகன வசதிகளை செய்து கொடுப்பதும் இல்லை.

அத்துடன் தோட்டங்களுக்கு அருகிலிருக்குந் நுவரெலியா, உடப்புஸ்ஸல்லாவ, கொட்டக்கலை, கிளங்கன், மஸ்கெலியா, புசல்லாவை, வட்டவளை போன்ற வைத்தியசாலைகளிலும் வசதிகள் இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு வைத்தியசாலைகளில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

தோட்டப்புற சுகாதார சேவை தோட்ட நம்பிக்கை நிதியத்திடம் இருக்கிறது. மாகாண சபைகளுக்கு கீழும் சில சுகாதார நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும். ஆனால் சாதாரண சிகிச்சைகள் கூட அளிக்கப்படுவதில்லை. அதற்குத் தோட்டங்களிலுள்ள சிறிய வைத்தியசாலைகளில் மருந்துகளோ வசதிகளோ இல்லை.

தோட்டப்புற சுகாதாரம் என்பது தோட்டப்புற பெண்களின் கரு வளத்தை அளிப்பது மட்டுமே என்று நினைத்துக் கொண்டே சுகாதாரத் துறையினர் செயற்படுகின்றனர்.

## மூதூர் கொலைகள் பற்றி விசாரிக்க வந்தனர்! திரும்பினர்!

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த 17 செயற்பாட்டாளர்கள் மூதூரில் கொலை செய்யப்பட்டமை பற்றி விசாரணை நடத்துவதற்காக இலங்கைக்கு வந்திருந்த அவுஸ்திரேலிய இரசாயன பகுப்பாய்வு நிபுணர்கள் விசாரணைகளை நடத்த முடியாத நிலையில் திரும்பி சென்றுவிட்டனர்.

விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை செய்யாமல் இலங்கை அரசாங்கம் இழுத்தடித்துக் கொண்டிருந்ததால் அவர்கள் அதிருப்தி அடைந்த நிலையில் நாடு திரும்பியுள்ளனர்.

அப்படுகொலைகள் தொடர்பாக சர்வதேச ரீதியாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதால் அந்த அவுஸ்திரேலிய நிபுணர்களை இலங்கை அரசாங்கம் அழைத்திருந்து. ஆனால் நடைமுறையில் அவ்விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

இந் நிலையில் பொத்துவில் இரத்தல்குள படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணைகளை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கிம் கேட்டிருந்ததையும் அதற்கு அரசாங்கம் மறுப்பு தெரிவித்திருந்ததையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

## எதற்காக இந்த எதிர்ப்பு

இஸ்ரேலிய பிரதமருக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் எதிரான கடும் எதிர்ப்பு அலை காரணமாக லெபனானில் தொடுக்கப்பட்ட போர் பற்றிய உயர்மட்ட விசாரணைகள் நடக்கவுள்ளன. பிரதமரும் பாதுகாப்பு அமைச்சரும் பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கைக்கான காரணம் யாரும் பெருமைப்படக் கூடிய ஒன்றல்ல. 1200 லெபனானிய குடிமக்கள் இறந்த போதும் ஒரு ஹிஸ்புல்லா போராளியையும் கொல்லவோ பிடிக்கவோ இயலவில்லை என்பதே இக் கொதிப்புக்குக் காரணம். மற்றப்படி லெபனானில் ஏற்படுத்தப்பட்ட பேரழிவைப் பற்றிய கோபம் கம்யூனிஸ்ற்றுக்கள் போன்ற சிறுபான்மையினர் மத்தியில் மட்டுமே உள்ளது. அந்தளவுக்கு ஸியோனிஸ இன மத வெறி இஸ்ரேலிய சமுகத்தைப் பீடித்திருக்கிறது. என்றாலும் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான போரின் தோல்வி அரபு நாடுகளில் வேறுவிதமான சக்திகளை உசுப்பி விட்டுள்ளது. எகிப்து ஜோர்டான் போல அமெரிக்கா இஸ்ரேலிய சார்பு அரபு நாடுகளின் மக்கள் பெருமளவில் ஹிஸ்புல்லாவுக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். இது சரியான திசையில் வளர்த்தெடுக்கப்படுமானால் அமெரிக்காவின் அரபு எடுபிடி ஆட்சிகள் விரைவில் ஆட்டங்காணத் தொடங்கிவிடும்.

## தெரிவிப்பது அவர்கள், முட்டாளாக்கப்படுவது நீங்கள்!

இவ்வருட முற்பகுதியில் சக்தி தொலைக்காட்சி நிறுவனத்தின் சார்பில் விடுதலைப் புலிகட்கும் அரசாங்கத்துக்குமிடையிலான ஜெனிவா பேச்சுவார்த்தைகளைப் பற்றிய நேர்முக வர்ணனை மூலம் தனது கையாலாகாத் தனத்தை வெளிக்காட்டிய தமிழ் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் அணிசாரா நாடுகளுடைய மாநாட்டை வர்ணிக்க ஹவானாவுக்கு அனுப்பப்பட்டார். மாநாடு தொடங்க முன்னமே அவரது கைவண்ணத்தை நாம் காணமுடிந்தது.

அணிசாரா நாடுகள் என்பன முதலில் சோசலிஷ, கலப்புப் பொருளாதார அமைப்புக்களைக் கொண்ட நாடுகளாக இருந்தனவாம்.இப்போது அங்கே எல்லா நாடுகளும் திறந்த பொருளாதாரக் கொள்கையுடையனவாம். தொடக்ககால அணிசேரா நாடுகள் என அவர் பட்டியலிட்ட நாலைந்து நாடுகளுள் ரஷ்யாவும் ஒன்று. அப்போது ரஷ்யா சோவியத் யூனியனில் இருந்தது நமது நிபுணருக்குத் தெரியாதது போக அணி சேராமை என்பதே சோவியத் அணி அமெரிக்க அணி என்பன சாராத நாடுகளைக் குறித்தது என்றும் அவருக்குத் தெரியாது. அவரிடமிருந்து மாநாடு பற்றி யாரும் எதையும் பயனுற அறிய இயலுமாயிருந்திருந்தால் தயவு செய்து தெரியத் தாருங்கள். செய்யப் போகிற அலுவலைப் பற்றிக் கொஞ்சம் விசாரிக்கிற அக்கறை கூட இல்லாதவர்கள் பொறுப்பேற்றால் வேறென்ன நடக்கும். அவரைப் பிழை சொல்லி என்ன பயன்!. அவர் பணியாற்றுகிற நிறுவனம் அப்படி! அவர்கள் எந்தக் குப்பையைக் கொட்டினாலும் அதைப் பார்ப்பதைத் தவிரத் தமிழ்த் தொலைக்காட்சியில் என்ன தெரிவு இருக்கிறது?

## நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால்...

நமது நாளேடுகளில் பத்திகளும் இலக்கியப் பகுதிகளும் சில்லறைத் தனமானவர்களிடம் ஒப்படைக்கப்படுகிற போது என்ன நடக்கும் என்று அறிய வேண்டுமானால் ஞாயிறு வெளியீடுகளைப் பார்க்கலாம். தமது தனிப்பட்ட பழைய கோபதாபங்களைத் தீர்க்கவும் வேண்டியவர்களை ஏற்றவும் வேண்டாதவர்களைத் தூற்றவுமே இப் பகுதிகட்குப் பொறுப்பானோர் சிலர் தம்து பக்கங்களைப் பாவிக்கின்றனர். அதுபோக வாசிக்கிற விஷயங்களை விளங்கி வாசிக்கிற அக்கறை கூட இவர்களிடம் இல்லை. சென்ற பயில் நிலம் இதழில் மெக்சிகோவின் சியாபாஸ் மாகாண ஸப்பாட் டிஸ்ற்றா புரட்சிகர இயக்கத்தின் தலைவர் சப் கொமாண்டன்ற் மாக்கொஸின் படம் இருந்தது. பிற போராளிகள் போல அவரும் எப்போதும் முகமூடியுடனே காட்சியளிப்பார். ஒரு இலக்கியப் பகுதியில் ஆயுதந் தாங்கிய ஒரு முகமூடி மனிதனின் படத்தைப் போட்டது பற்றி என்னென்னவோ விளக்கங்கள் எல்லாம் தரப்பட்டிருந்தது. சஞ்சிகையை வாசித்திருந்தால் இந்த அவலம் நேர்ந்திராது.

எதையும் நிதானமாக ஆராயவோ விசாரிக்கவோ நேரமில்லாமல், தாங்கள் அறிந்த அரைக் கையளவு தகவல்களுடன் உலகறிந்த பாவனையில் தங்களை உயர்த்தி இலக்கியப் பாசாங்கு காட்டுகிறவர்களிடம் வேறெதை எதிர்பார்க்க முடியும்?

## ரணிலின் சாயம்

இந்தியப் படைகளை இலங்கையிலிருந்து போகச் செய்தது தவறு என்று ரணில் விக்கிரமசிங்ஹ சொல்லியிருக்கிறார். ஏன் தெரியுமா? இந்தியப் படைகள் தொடர்ந்தும் இருந்திருந்தால் விடுதலைப் புலிகளைக் கட்டுப்பாட்டுக்குட் கொண்டு வந்து பிரச்சினையைத் தீர்த்திருப்பார்களாம்.

இப்பொழுதாவது ரணிலின் சமாதான நோக்கங்கள் பற்றி இன்னமும் பகற் கனவு காணுகிற தமிழர்கள் கொஞ்சம் விழிப்பார்களா?

# நாலு நடக்கும் நற்குணன் உலகிலே

## பயங்கர ரசனை

செப்ரெம்பர் 11 விமானத் தாக்குதலின் நினைவுச் செய்திகளை ஒலிபரப்பிய எம்.ரீ.வி., சிரச, சக்தி நிறுவனம் உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் சிதைகிற படங்களை வர்ணனையுடன் காட்டியது. அந்த வர்ணனைகள் மூன்று மொழிகளிலுமே ஏதோ கிரிக்கட் ஆட்ட வர்ணனை மாதிரியோ சுற்றுலாப் பயணிகட்கு வழி காட்டுகிறவரது வர்ணனை மாதிரியோ எதுவிதமான துயர உணர்வுமில்லாமல் முழுக்க முழுக்கப் பொழுது போக்குத் தன்மையானதாகவே அமைந்திருந்தது. இது தொலைக்காட்சி ஊடகத்தின் சீரழிவின் அடையாளம் என்பதுடன் குறிப்பிட்ட நிறுவனத்தின் வியாபார நோக்கத்தின் தொடர்ச்சியான வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது.

விமானத் தாக்குதலைத் திட்டமிட்டவர்கள்கூட தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் போன்று அதைச் சப்புக் கொட்டி ரசித்திருப்பார்களோ தெரியாது.

## போர்ப் புறாக்கள்

ராணுவத்தினரால் புனிதப்படுத்துகிற ஒரு பாடல் மும்மொழிகளிலும் சகல தொலைக்காட்சி ஊடகங்களிலும் நாளுக்குப் பலமுறை காட்டப்படுகிறது. போரால் பாதிக்கப்பட்டோரையும் போரை வெறுப்போரையும் அது அருவருப்பூட்டியிருக்கும் என்பது எனது எண்ணம். போர் நடந்த காலத்திலும் இல்லாதளவு முப்படைகளையும் புனிதப்படுத்துகிற இவ்வாறான விளம்பரங்கள் போர் நிறுத்தம் பேரளவில் நடைமுறையிலுள்ள போது ஏன் பெருமளவில் காட்டப்படுகின்றன?

போரைவிட மோசமான ஒரு ஆபத்தை அதாவது ராணுவ ஆட்சியை இந்த நாடு எதிர் நோக்குகிறதா என்ற கேள்வி சிலரது மனங்களிலாவது எழுந்திருக்கும்.

## அமெரிக்காவின் கருணையாலும்?

விடுதலைப் புலிகளின் மீதான சில விமானத் தாக்குதல்களும் செஞ்சோலைத் தாக்குதலும் அந்தரங்கமான தகவல்கள் இல்லாமல் இவ்வளவு தூரம் குறிதவறாமல் நடத்தப்பட்டிருக்க இயலாது. உளவுகாரரெனப் பலர் மீதான ஐயங்களும் எழுந்தாலும், 1994 சுனாமிக்குப் பின்பு அமெரிக்க நிவாரணப் பணியாளர்கள் வடக்கு-கிழக்கில் பல்வேறு இடங்கட்கும் சென்று பார்வையிட்டுள்ளதை நாம் நினைவு கூராமலிருக்க இயலாது. அவர்கள் திரட்டிய தகவல்கள் எல்லாம் சுனாமியால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு பற்றியவை மட்டுமல்ல. விடுதலைப் புலிகளின் ராணுவ பலம் தொடர்பான பலவேறு விடயங்களும் திரட்டப்பட்டுள்ளன. அதைவிடவும் புதிய உளவுத் தொடர்புகளையும் அவர்கள் ஏற்படுத்தியிருக்க வாய்ப்புண்டு. இது பற்றிப் புதிய பூமி எப்போதோ எச்சரித்திருந்தது. அண்மைய தாக்குதல்களுக்கு அமெரிக்கத் தகவல்கள் பயன்பட்டிராது என்று யாரும் உறுதியாகச் சொல்ல இயலுமா?

## ஐலன்டைப் போல நடுநிலை உண்டோ?

"அப்பன் குதிருக்குள் இல்லை" என்ற கதை போல, ஒரு மாக்ஸிய விரோத தமிழ் மாசிகை நடுநிலையானது என்று நிறுவுவதற்காக ஓரிருவர் அந்த ஏடு பலவேறு கருத்துடையவர்களதும் ஆக்கங்களைப் பிரசுரிப்பதை ஆதாரமாகக் கூறியிருந்தார்கள். அந்த அளவுகோலின்படி ஐலன்ட் நாளேடு போல நடுநிலையான நாளேடு இருக்க இயலாது. தீவிர தமிழ்த் தேசியவாதக் கருத்துக்களுக்கும் இடையிடை இடமளிக்கிறதன் மூலம் ஐலன்ட் மிகத் திறமையாகத் தனது பேரினவாத நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கிறது.

முதற் குறிப்பிட்ட ஒரு மாதிரியான சில ஏடுகளில் ஏன் உண்மையான இடதுசாரிகள் எழுதுவதில்லை என்ற கேள்விக்கான பதிலை இன்னொரு கேள்வி மூலம் தரலாம். ஐலன்டில் ஏன் பொதுவாகவே நேர்மையான இடதுசாரிகள் எழுதுவதில்லை என்ற கேள்விக்கான பதிலை இன்னொரு கேள்வி மூலம் தரலாம். அண்மையில் வாசுதேவ நாணயக்கார ஐலன்ட் நிருபருடன் பேசுவதற்கே மறுத்துள்ளார்.

நடுநிலை என்பது ஏடுகளின் வெளித்தோற்றம் சார்ந்த விடயமல்ல. அது அவற்றின் நடத்தையின் சாராம்சம் சார்ந்தது.

## அனுரவும் அந்நியக் குறுக்கீடும்

அனுர பண்டாரநாயக்க அமெரிக்க குறுக்கீடு பற்றி முன்னொரு முறை கண்டித்துப் பேசினார். அண்மையில் நிருபமாராவின் குறுக்கீடு பற்றிப் பேசியிருக்கிறார். இரண்டு தடவையும் அவர் சொன்னவை உண்மை. எனினும் அவர் பங்கு வகித்து வரும் அரசாங்கம் இந்த உண்மைகளை வெளிப்படையாக ஏற்கத் தயங்குகிறது. உண்மையில் புதிய பூமி எப்போதோ சொன்னதையே அவர் காலந் தாழ்த்திச் சொல்கிறார்.

அவருக்கும் புதிய பூமிக்குமுள்ள வேறுபாடு ஏதெனில் அவர் சிலவகையான குறுக்கீடுகளைக் கண்டு கொள்ள மாட்டார். புதிய பூமியோ எல்லாவிதமான அயற் குறுக்கீடுகள் பற்றியும் மக்களை எச்சரிக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஏ 9 பாதை திறக்கப்பட வேண்டும் இயல்பு வாழ்வு ஏற்படுத்தப்பட வேண்டும்

ஏ 9 பாதை திறந்திருப்பது போர் நிறுத்தம், சமாதான நடவடிக்கைகள், வடமாகாண மக்களின் இயல்பு வாழ்க்கை போன்றவற்றை உறுதி செய்வதற்கான அடிப்படையாகும். யாழ்ப்பா ணத்திலும், முகமாலைப் பகுதிகளிலும் அரச படையினருக்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையே நடைபெறும் மோதல்கள் வன்னிப் பகுதியில் அரச விமானப் படைகள் நடத்தும் வான் தாக்குதல்கள் போன்றவற்றால் ஏ9 பாதை இயங்கவில்லை.

கடந்த இரண்டு மாதங்களாக தேவைக்கேற்ப அத்தியவசியப் பொருட்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு சென்றடையவில்லை. இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்படவுமில்லை. அத்தியவசிய சேவைகள் ஆணையாளர் என்ன தான் கூறினாலும் பொருட்கள் இல்லாத, பணப்புழக்கம் இல்லாத சூழ்நிலையை யாழ்ப்பாண மக்களும் சர்வதேச உணவு நிகழ்ச்சித் திட்ட அமைப்பு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பனவும் உறுதி செய்துள்ளன. இது தமிழ் மக்கள் மீது யுத்தத்தை திணித்து, அவர்களை பட்டினி போட்டு சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தோல்வியடையச் செய்யும் பேரினவாதிகளின் குரூரமான திட்டமாகும்.

கடந்த இரண்டு மாதகாலமாக யுத்தத்தை நடத்திய விதமும், மக்களின் மனிதாபிமான தேவைகள் கணக்கில் எடுக்கப்படாத விதமும், பேரினவாதிகளின் மேலாதிக்கம் மேலும் பலமடைந்துள்ளதையே காட்டுகிறது. சர்வதேச சமூகம், சர்வதேச மனிதாபிமான சமவாயங்கள், சட்டங்கள் பற்றி எவ்வளவுதான் பேசியபோதும், தமிழ்த் தேசியவாதிகள் இந்தியாவின் தொப்புள் கொடி உறவுகள் பற்றி எவ்வளவுதான் பேசிய போதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் போர் நடிவடிக்கைகளை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இம்மாத முதல் பகுதிகளில் சமாதான நடிவடிக்கைகளுக்கான நோர்வேயின் சிறப்பு தூதுவர் ஹன்சன் பௌர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இடுத்த மாதம் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறலாம் என்று கூறப்படுகிறது. பௌர் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போது விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.


எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை எப்படி இருக்கும் என்றும் யாரும் எதிர்வு கூற முடியாது. பேச்சுவார்த்தைக்கு தயார் என்று கூறுவதும் பின்னர் தாக்குதல்களை நடத்துவதும் சமாதானத்திற்கு எவ்வகையிலும் உதவப் போவதில்லை.

போர் நிறுத்தம் உறுதியாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். மக்களின் இயல்பு வாழ்ககையை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக ஏ9 பாதை திறக்கப்பட்டு எவ்வித பிரச்சனைகளும், அச்சுறுத்தல்களுமின்றி போக்குவரத்துகள் இடம்பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

சாதாரண மக்களுக்கு கப்பல், விமானப் போக்குவரத்துகளை நாடமுடியாது. அவர்களுக்கு சுலபமானது ஏ 9 போக்குவரத்தே என்பதால் அப்பாதை திறக்கப்பட் வேண்டும்.

யாழ் குடா நாட்டு மக்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் உத்தியோகபூர்வமற்ற பொருளாதாரத்தடை நீக்கப்பட வேண்டும். அங்கு அத்தியவசியப் பொருட்கள் போதுமான அளவு கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க கட்டுப்பாட்டு பகுதிகளில் போதியளவு அத்தியவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## பெண்மை வெடித்தெழுந்த வேளை



எத்தனை காலந்தான்
எதிர்க்காமல் ஊமையாக
உணர்வலைகளைச் சகித்தபடி
உள்ளுக்குள்ளே மரணிப்பது?

நெருப்புத் தீண்டிப் பொசுங்கிய
என் இதயமெங்கும் சுற்றி
சுனாமியாய் சோகஅலை
பெருக்கெடுத்து ஓடுகிறது.

உடைந்து நொருங்கிச் சிதைந்த
உள் இதய அறைகளிலிருந்து
உக்கிரக் கோபச் சுவாலையுடன்
உதிரம் பெருக்கெடுத்துப் பாய்கிறது.

வானத்து வெள்ளிகளை எல்லாம்
விழுங்கி ஏப்பம் விடுகின்றதாய்
வன் சீற்றத்துடன் இன்னும்
வாய்திறக்காதிருக்கிறேன் பொறுமையாய்!

சகலதும் விம்மி வெடிக்கையில்
சம்பிரதாயங்கள் தவிடுபொடியாகும்
சாதுமிரண்டால் வீடு கொள்ளாது
சாணக்கியரும் சாம்பலாய் போவார்!

-சந்திரகாந்தா முருகானந்தன்-

## யாழ். மாணவர்களுக்கு காலவரையற்ற விடுமுறை?

ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்ப் பிறகு யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் இயங்கவில்லை. யுத்த சூழ்நிலை காரணமாகவும் பயம் காரணமாகவும் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லவில்லை. உடனடியாகப் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியங்களும் இல்லை.

மாணவர்கள் பாடசாலைகளை பகிஷ்கரிப்பதாக கூறுவதில் உண்மை இருப்பதாக தெரியவில்லை. வான் தாக்குதல்களும் எறிகணைத் தாக்குதல்களும் நடைபெறும் போது பொது மக்கள் நடமாட முடியாத அளவிற்கு கொலைகளும், கடத்தல்களும் நடைபெறும்போது பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லுவது பாதுகாப்பானதாக இருக்க முடியாது.

யாழ். குடா நாட்டில் நிலவும் யுத்த நிலை காரணமாக அங்கு எல்லா விதத்திலும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பொருட்கள் இல்லை அதனால் கடைகள் இயங்கவில்லை. பாடசாலைகள் இயங்கவில்லை. வங்கிகள் இயங்கவில்லை.

பாடசாலைகள் இயங்காததால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், ஆசிரியர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கப்பட்டு விரைவில் பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும்.

## போரின் மொழியில் கூறப்பப்படும் கதைகள்

நாங்கள் மக்கள் படும் இன்னல்கள் பற்றிப் பேசுகிறோம்
வீடுகள் மீதும் கோயில்கள் மீதும்
மருத்துவ மனைகள் மீதும் பாடசாலைகள் மீதும்
குண்டுகள் விழுவது பற்றிப் பேசுகிறோம்
மனிதர் மிரட்டப்படுவதையும் கடத்தப்படுவதையும்
துன்புறுத்தப்படுவதையும் கொல்லப்படுவதையும்
பற்றிப் பேசுகிறோம்
உணவும் நீரும் மருந்தும் எரிபொருளும் இன்றி
மக்கள் அன்றாடம் அல்லாடுவது பற்றிப் பேசுகிறோம்
மக்கள் அச்சத்தினிடையே வாழ்வது பற்றிப் பேசுகிறோம்
அச்சத்தால் இடம் பெயர்வது பற்றிப் பேசுகிறோம்
உயிருக்கு அஞ்சி உயிரைப் பணயம் வைத்து
அயல் மண்ணுக்கு அகதிகளாகச் சிதறுவது பற்றிப்
பேசுகிறோம்
உடைமைகள் இழந்து நலிவது பற்றிப் பேசுகிறோம்.
படுகொலைகளைப்பற்றிப் பேசுகிறோம்- குழந்தைகளின்
அழிக்கப்பட்ட எதிர்காலம் பற்றிப் பேசுகிறோம்.

நீங்கள் பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறீர்கள்- நாட்டின்
பாதுகாப்புப் பற்றிப் பேசுகிறீர்கள்
எங்கள் கேள்விகள் உங்கள் காதில் விழுவதில்லை
எங்கள் முறைப்பாடுகள் உங்கள் கவனத்திற் படுவதில்லை
என்றாலும் கேட்பது போலவும் கவனிப்பது போலவும்
இடையிடை பாவனை செய்கிறீர்கள்.
விசாரிப்பதாகச் சொல்லுகிறீர்கள்- எப்போதுமே
பிறர் மீது பழியைப் போடுகிறீர்கள்.
போரென்றாற் போரென்பதும்
அமைதிக்கான போரென்பதும்
போரில்லாத போரென்பதும்
ஒன்றேதான் வேறல்ல.
நீங்களும் அறிவீர்கள் நாங்களும் அறிவோம்
நாங்கள் சொல்லுகிற கதைகள்
மனிதரது கண்ணீராலும் சிந்துகிற குருதியாலும்
எழுதப்படுகின்றன.
நீங்கள் சொல்லுகிற கதைகள்
எறிகணைகளாலும் ஏவுகணைகளாலும்
வெடி குண்டுகளாலும் துப்பாக்கி வேட்டுக்களாலும்
கண்ணிவெடிகளாலும் எழுதப்படுகின்றன.
நாங்கள் எல்லா மக்களது உயிரிழப்புக்கட்காகவும்
வருந்துகிறோம்
நீங்கள் உங்கள் சிலரதை விட வேறெதையும் பற்றி
வருந்துவதில்லை.

உண்மைகளாகவும் பொய்களாகவும்
ஒரே கதைதான் சொல்லப்படுகிறது
விளங்குவது போலவும் விளங்காதது போலவும்
ஒரே கதை பற்றித்தான் பாவனை செய்யப்படுகிறது.
மனிதரின் அழிவின் மீது உங்கள் வெற்றிக் கொடியை
நீங்கள் நிலைநாட்ட முயலுகிறீர்கள்
கதை முடிவில் உங்களது அழிவின் மீது
மானுடம் தனது வெற்றிக்கொடியை நிலைநாட்டும்.

-சேகர்-



www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சப்பிரகமுவாவில் தமிழ் மாணவர்களுக்கு உயர்தர கற்கை நெறிகள் அவசியம்

மலையக தேசிய இனத்துள் உள்ளடங்கிய ஆனால் யாராலும் கண்டு கொள்ளப்படாத மக்களாக சப்ரகமுவ மாகாண தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாறான சூழ்நிலையில் இங்கே அடிக்கடி அரங்கேறும் பேரினவாதிகளின் அச்சுறுத்தல்களும், தாக்குதல்களும் எம் மக்களை மிகுந்த ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கியுள்ளது. இருப்பினும் கூட தங்களது தனித்துவ அடையாளத்தினை மறந்து விடாதவர்களாக இவர்கள் தம் இருப்பினை பேணி வருகிறார்கள்.

காலம் காலமாக பேரினவாத அரசியல் கட்சிகளுக்கும் பிற்போக்கு தொழிற்சங்கங்களுக்கும் வாக்களித்து இம் மக்கள் கண்ட பலன் எதுவுமில்லை. எல்லாத் தோட்டங்களிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியானது பெருகி மக்களை ஏப்பம் விடும் அதேநிலையில் தோட்டக் காணிகள் பெரும்பான்மை இனத்தவரால் அபகரிக்கப்படுவதும் கண்டு கொள்ளப்படுவதில்லை. இந்நிலையில்தான் இப்பிரதேச கல்வி நிலை குறித்து பார்க்க வேண்டி இருக்கிறது. சப்பிரகமுவ மாகாணத்தின் கல்வி நிலை மிக பின்தங்கி இருக்கிற அதேவேளை குறிப்பாக இரத்தினபுரி, களுத்துறை மாவட்டங்களின் நிலை மிக மோசமானதாக இருக்கின்றது. இதற்கான காரணமாக இங்கு இயங்கிவரும் பாடசாலைகளில் பாரிய ஆசிரியப் பற்றாக்குறையினை குறிப்பிட வேண்டும். இத்தகைய சூழ்நிலை நிலவியும் கூட கணிசமான மாணவர்கள் சாதாரணதர, உயர்தரத்தில் சித்தி அடைகின்றனர்.

இந்நிலையில் சாதாரண தரங்களில் சித்தியடையும் மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான கணித, விஞ்ஞான, வர்த்தக கற்கை நெறிகளை மேற்கொள்ள இப்பிரதேசத்தில் ஒரு பாடசாலை கூட இல்லாத நிலையில் ஹட்டன் பிரதேசத்தில் கற்று வருகிறார்கள். இம்முறை அந்த வாய்ப்பு வழங்கப்படக் கூடாது என்று கூறப்பட்டது. பின்னர் இவ்வருடத்துக்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இம்மாவட்டங்களில் இந்த விசேட கற்கை நெறிகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற முனைப்பு மக்களால் பரவலாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் இங்கே அக் கற்கை நெறிகள் தொடங்குவதற்கான அனுமதி அளிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி வளர்த்தெடுக்கக் கூடிய நிலையில் சரியான தளத்தில் அமைந்த ஒரு பாடசாலையினை தெரிவு செய்ய வேண்டும். மாறாக தங்களது சுய நலங்களையே குறிக்கோளாக கொண்ட கல்வி அதிகாரிகளின் பிற்போக்குத் தனங்கள் செயலாக்கம் பெறுமாயின் இப்பிரச்சினை தொடர்ந்தபடியே இருக்கும். எப்போதுமே கல்வி வளர்ச்சியைப் பற்றி பேசிக் கொண்டு தங்களது வக்கிரத் தனங்களினால் இடமாற்றங்களையும் சுயலாபங்களையும் தேடிக்கொள்ளும் அதிகாரிகளைப் பொருட்ப டுத்தாது முற்போக்கு நோக்குடன் செயற்படும் இயக்கங்கள் அழுத்த ங்களை வழங்குவது அவசிய மானதாகும்.

**பா.மகேந்திரன்**

# அரசியல் குருட்டுத்தனம்

மலையகத்தின் அரசியல் நிலைமைகளை நோக்குகையில், பிற்போக்குத் தனங்களின் வடிவமாகவும் ஏகாதிபத்திய ஏவல்களை நடைமுறைப்படுத்துபவையாகவும் பார்க்கலாம். மூன்றாம் உலக நாடுகளின் அரசியலில் பிற்போக்கு அரசியல் கோலோச்சும் அதேவேளை புரட்சிகர அரசியல் எழுச்சி கொள்வதையும் நோக்கலாம். இலங்கையும் இலங்கையின் மலையகமும் இதற்கு விதிவிலக்கல்ல.

அரசியல் படாடோபங்களும் வக்குரோத்துத் தனங்களும் மலிந்து போய் காணப்படுகிறது. அரசியல் தெளிவுள்ளவர்களும் குறுகிய கண்ணோட்டத்துடன் இருப்பதால் பிற்போக்கு அரசியல் வடிவங்களுக்கு இன்றும் சாதகமான நிலைமையே காணப்படுகிறது. மலையகத்தின் பிராதான இரு கட்சிகளும் அதிலிருந்து பிரிந்து போய் நிற்கும் உதிரிகளும் இந்தப் பிற்போக்கின் பிரதிநிதிகளாவர்.

இந்தப் புரிதல் எந்தளவிற்கு தகவல் வழங்கும் ஊடகங்கள் மத்தியிலும் இருக்கிறது என்பது தெரியவில்லை. நாட்டில் இன்று உத்தியோகபூர்மற்ற யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. தினம் தினம் இன அழிப்புகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழர்கள் திட்டமிட்டுக் கடத்தப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள். மலையகத்தில் பம்பேகமுவ, இரத்தினபுரி பகுதியில் அண்மைக் காலமாக நடைபெற்றுவரும் பேரினவாத காடையர்களின் அட்டகாசம், அவசரகாலச் சட்டம் என்பன இன்றைய நாட்டு நிலைமையை நமக்கு நன்றாகவே புலப்படுத்துகிறது.

இந்த நிலையில் மலையகத்தின் பிரதான அரசியற் கட்சியைச் சார்தவர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்று அரசாங்கத்தில் இணைந்துள்ளனர். இதில் சரி என்று எதனையும் நியாயப்படுத்த இயலாது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் இவர்கள் அரசாங்கத்தில் இணைவதன் மூலம்தான் மலையகத்தின் உரிமைகளை பாதுகாக்கலாம் அல்லது வென்றெடுக்கலாம் என்று பிதற்றுவார்களேயானால் அது பெரும் முட்டாள்தனமாகும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அரசியல் பாரம்பரியமே ஆட்சியாளர்களுக்கு சாமரம் வீசுவது தானே என்பது போக விடுதலைப் புலிகளைப் பற்றியும் தமிழ் மக்களைப் பற்றியும் வீர முழக்கமிட்ட சந்திரசேகரத்துக்கு என்ன நடந்தது.

செஞ்சோலையில் அப்பாவி மாணவிகள் கொல்லப்பட்டுள்ளனர். மலையக மக்கள் முன்னணி கொழும்பு மாவட்ட அமைப்பாளர் சிவகாந்தன் கடத்தப்பட்டுள்ளார். இந்தச் சூழலில்தான் அவர்கள் அரசாங்கத்தில் சேர்ந்துள்ளார்கள்.

அடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம்.பிக்கள் அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாகவும் வாக்களித்துள்ளனர். மலையக மக்கள் முன்னணி எம்.பிக்கள் அன்றைய தினம் சபைக்கு சமூகமளிக்காமல் தவிர்த்துள்ளனர் அவசரகாலச் சட்டத்தால் பாதிக்கப்படப்போவது அனைத்து மக்களும் தான். மலையகத்திலும் சந்தேகத்தின் பேரிலான கைதுகள் அதிகரித்துள்ளன.

இவர்களது நடத்தை இவர்களின் கொள்கையை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. இவர்களின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது? இவர்கள் என்ன பின்னணியில் அரசாங்கத்தில் சேர்ந்துள்ளார்கள்? என்பன தெளிவற்றனவாகவே உள்ளன.

இவர்களை நம்பித்தான் மலையக மக்கள் தமது சம்பளவுயர்வை பற்றி சிந்திக்கப் போகிறார்களா? இவர்களின் வழி நடத்தலில்தான் நம் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கப் போகிறார்களா? கோரயுத்தச் சூழலில் ஒரு சிறுபான்மைக் கட்சி இவ்வாறு தான்தோன்றித்தனமாக நடக்கக் கூடாது. பம்மாத்து அரசியல் செய்பவர்களைப் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது அனைவரின் கடமையாகும்.

வெகுஜனப் போராட்டத்தின் மூலமே மக்கள் தமது உரிமைகளையும், சமூக விடுதலையையும் பெற இயலும். அதை விடுத்து மக்கள் நலனில் அக்கறை இல்லாத இவர்களை மீண்டும், மீண்டும் தேர்ந்தெடுப்போமாயின் அது எமது மூடத்தனமே. சரியாகச் சிந்தித்து மக்கள் சரியான பாதையில் பயணிக்க வேண்டும்.

**-சுந்தரி-**

# கிட்டு எழுதும் கடிதம்

இரத்தினபுரி, பம்பேகமுவ பிரதேசத்தில் இருந்து இன வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களை அங்கிருந்து புசல்லாவையில் குடியமர்த்தினர் நம் ஐயாமார்கள்.

அவர்களுக்கு அங்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லையாம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் பாராமுகமாக உள்ளதாம் என செய்திகளில் காணக்கிடைத்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதைப்பற்றி கணக்கிலெடுத்துள்ளது? அன்று அவர்கள் அடிபட்ட போது வீரவசனம் பேசியவர்கள் இன்று மௌனியாகி விட்டனர்.

அந்தப் பிரதேசத்திலேயே அந்த மக்களுக்கு சுய பாதுகாப்பை ஏற்படுத்தி அவர்களுக்கான இருப்பை உறுதி செய்திருக்க வேண்டும். அதுதான் சிறந்ததாக இருந்திருக்கும். இந்தத் தீர்வுகளைக் கூட எடுக்க நாதியற்றவர்கள் தான் எமது தலைவர்கள்.

மலையக மக்கள் முன்னணியின் மாகாணசபை உறுப்பினரின் ஊர்தான் புசல்லாவை. இந்தியா நமது மக்களுக்கு அகதி அந்தஸ்து வழங்க வேண்டும் என கூவித்திரிந்த இவர், அவரது ஊரில், கஷ்டப்படும் மக்களைப் பற்றி கரிசனை எடுப்பாரா?

தற்போது தோட்டங்களில் வேலையில்லாதவர்களையும், ஓய்வு பெற்றவர்களையும் தோட்ட நிர்வாகம் திட்டமிட்டு வெளியேற்றி வருகிறது. இது சம்மந்தமாக மலையகத் தலைமைகளின் தீர்வு எப்படி அமையப் போகிறது என்பது தெரியவில்லை.

மலையகப் பிரதான கட்சிகள் இரண்டும் இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையில் அரசாங்கத்தில் இணைந்தது அப்பட்டமான சந்தர்ப்பவாதமாகும். இலங்கையில் இப்போது பேரினவாதத்தின் துவக்குகள் ஒவ்வொரு சிறுபான்மையினருக்கும் எதிராக வைக்கப்பட்டுள்ளன. உரிமை, சுதந்திரம், சமத்துவம் என்பவற்றையும் மறந்து விட்டனர் எமது ஜனநாயகவாதிகள். இன்று யாருக்கோ நடப்பது நாளை நமக்கு என்பதை விட, இன்றே நமக்கும் நடக்கிறது.

அண்மையில் தினக்குரலில் வெளிவந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரின் பேட்டி அவரின் அரசியல் தெளிவின்மையை நன்றாக புலப்படுத்துகிறது. திட்டமிட்ட இன அழிப்புக்களை அவர் அறியாமலிருக்க முடியாது.

இலங்கை ஜனநாயக தொழிலாளர் முன்னணியின் தலைவர் சதாசிவம் மலையகத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்பதால் அவர்களுக்கு இலங்கை அரசாங்கம் ஆயுதங்களை வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார். இது மிகவும் கவர்ச்சியான கோரிக்கையும் அறிக்கையுமாகும்.

இரத்தினபுரி, கீரகலை தோட்டக் குடியிருப்புக்களிலிருந்து குடியிருப்போரை வெளியேற்றுவது பற்றி குறிப்பிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நிதிக்காரியதரிசியும் பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம் பேசும்போது அப்படியெல்லாம் யாரையும் வெளியேற்ற முடியாது என்று முழங்கினார்.

மலையக மக்கள் முன்னணி தலைவரோ தோட்டக் குடியிருப்புக்களிலிருந்து குடியிருப்போரை வெளியேற்ற முடியாது என்று சுற்று நருபம் இருப்பதாக கண்டுபிடித்துள்ளார். அச்சுற்று நிருபம் இருக்கிறதா இல்லையா என்பதும் அவருக்கு மட்டுமே தெரியும். அப்படியே சுற்று நிருபம் இருந்தாலும் சட்டங்களுக்கு மேலாக சுற்று நிரூபம் அதிகாரமுடையதல்ல.
எனவே எனது தாழ்மையான வேண்டுகோள் யாதெனில் நிலைமைகளை சமாளிக்க முடியாத போது வீராவேசமோ பொய்யோ பேசாதீர்கள். உண்மைகளை மறைக்க முற்படாதீர்கள்.

இப்போது மலையகத் தலைவர்கள் எனப்படும் எல்லோருமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துடன் இணைந்திருக்கிறீர்கள்.

தோட்டக் குடியிருப்புக்களிலிருந்து குடியிருப்போர் வெளியேற்றப்படமாட்டார்கள் என்ற சட்டரீதியாக வலுவுடைய பொதுப்பிரகடனத்தை வெளியிடும்படி ஜனாதிபதியை கேளுங்கள். தோட்டக் குடியிருப்புக்கள் குடியிருப்போருக்கே சொந்தம் என்ற சட்டரீதியான ஏற்பாடுகளையும் பெற்றுக் கொடுங்கள்.

மலையகத் தமிழ் மக்களின் இருப்பு, பாதுகாப்பு, போன்ற அடிப்படை விடயங்களுக்கே தீர்வில்லாதபோது அமைச்சர் பதவிகள் எதற்கு! அதிகாரங்கள் எதற்கு?

*இப்படிக்கு*
*கிட்டு*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று15 ஒக்டோபர் 2006 பக்கம்12 விலை 15/ சுழற்சி 96
எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E- mail : puthiyapoomi@hotmail.com

## வேலை நிறுத்த உரிமை நாசகார நடவடிக்கை அல்ல

தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்கின்ற முதலாளிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் தொழிலாளர்களின் உயர்ந்த போராட்ட வடிவமே வேலை பகிஷ்கரிப்பு அல்லது வேலை நிறுத்தமாகும். அது சட்டரீதியான உரிமையாகும். அதாவது தொழிற்சங்கங்கள் முதலாளிகளுக்கு முன்னறிவித்தலை கொடுத்துவிட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட சட்டம் இடமளிக்கிறது. 1956ஆம் ஆண்டிற்குப் பின்னரே வேலை நிறுத்த உரிமை சட்டரீதியான உரிமை என்ற அந்தஸ்த்தைப் பெற்றது. இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் நீண்டகால போராட்டத்திற்கு சட்டரீதியான அந்தஸ்த்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

இவ்வாறு சட்ட அந்தஸ்த்தை பெற்றுக் கொண்ட வேலை நிறுத்த உரிமை பல அடக்குமுறை சட்டங்களால் அவ்வப்போது மறுக்கப்பட்டுள்ளது.அவசரகால சட்ட விதிகளை கொண்டு வேலை நிறுத்த உரிமையை அரசாங்கங்கள் பறித்துள்ளன. குறிப்பாக 1980 யூலை மாதம் சம்பள உயர்வினைக் கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த லட்சக் கணக்கான அரசாங்க ஊழியர்களின் உரிமையை ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பறித்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டடிருந்த லட்சக்கணக்கான அரசாங்க ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களின் குடும்பங்கள் பட்டினியால் வாடின. வேலை இழந்தவர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர்.

இதே போன்று பல சந்தர்ப்பங்களில் அவசரகால சட்ட விதிகளின் கீழ் அத்தியாவசிய சேவைகளை பிரகடனஞ் செய்து குறிப்பிட்ட சூழ்நிலையில் வேலை நிறுத்தம் செய்ய முடியாது தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் தடுக்கப்பட்டன.

சில மாதகாலமாக தனியார் கம்பெனிகளும் அரசாங்க நிறுவனங்களும் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு எதிராக நீதிமன்றத் தடையுத்தரவுகளைப் பெற்றுக் கொண்டு வேலை நிறுத்த உரிமைகளை மறுத்து வருகினறன. வேலை நிறுத்தங்களுக்கு எதிராக சில தனியார் நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களும் தொடுத்துள்ள வழக்குகளில் வேலை நிறுத்தங்களுக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சில தனியார் நிறுவனங்களும், புகையிரத திணைக்களம், துறைமுக அதிகாரசபை போன்றனவும் வேலை நிறுத்தங்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவுகளைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதைவிட கூட்டு ஒப்பந்தங்களின் மூலம் தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. அதாவது குறிப்பிட்ட கூட்டு ஒப்பந்தம் அமுலில் இருக்கும் போது அதில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக வேலை நிறுத்தம் செய்ய முடியாது.

இதேவேளை அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஜனாதிபதியினால் 2006 ஆகஸ்ட் 03ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் செய்யப்பட்டுள்ள பிரகடனத்தின்படி வேலை நிறுத்தங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. அதன்படி இலங்கையில் தொழிற் சங்க நடவடிக்கையாக வேலை நிறுத்தம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அத்தடையை மீறி வேலைநிறுத்தத்தை முன்னெடுக்கும் தனிநபர்களினதும், தொழிற்சங்கங்களினதும் அசையும், அசையா சொத்துக்கள் அரசுடமையாக்கப்படுவதுடன் வேலை நிறுத்தம் செய்பவர்களுக்கு குற்றத் தண்டனையும் விதிக்கப்படும். தொழிலாளர்களினதும் சாதாரண மக்களினதும் தலைவன் என்று சொல்லப்டும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே மேற்படி பிரகடனத்தை செய்துள்ளார். அவர் தொழிலமைச்சராக இருந்த காலத்தில் தொழிலாளர் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார் (அதை சட்டமாக்க முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது).

குறிப்பிட்ட வேலை நிறுத்தத் தடை பற்றி அதிகம் பேசப்படாது இரகசியமாகவே இருந்தது. அதனை தெரிந்து கொண்டபிறகு தொழிற்சங்கங்கள் போராட்டங்களுக்கு தயாராகிக் கொண்டிருந்த வேளையில் அப்பரகடனத்தை ஜனாதிபதி இரத்து செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இரத்து செய்வதாக கூறினாலும் அரசாங்க வர்த்தமானி மூலம் இன்னும் இரத்து செய்யப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த அப்பிரகடனம் பற்றி எதுவும் அறியாதது போல் தான் ஒருபோதும் தொழிற்சங்க உரிமைகளுக்கு எதிராக இருக்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். அவ்வாறெனின் அப்பிரகடனத்தை ஜனாதிபதியின் பேரில் வேறு யாராவது வெளியிட்டார்களா? அதற்கு வாய்ப்பே இல்லை. எனவே இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கமும், தொழிற்சங்கங்களும் மிகவும் வழிப்புடன் செயற்பட வேண்டியிருக்கிறது. கைத்தொழில் பிணக்குகள் சட்டம், தொழிற்சங்கக் கட்டளைச் சட்டம் உட்பட சர்வதேச சமவாயங்களிலும் உறுதி செய்யப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கான உரிமைகளை குறிப்பாக வேலை நிறுத்த உரிமையை கையுதிர்க்க முடியாது. நீதிமன்ற நடிவடிக்கைகளினாலும் அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளினாலும், கூட்டு ஒப்பந்தங்களினாலும் மட்டுப்படுத்தப்படுகின்ற தடுக்கப்படுகின்ற வேலை நிறுத்த உரிமையை பாதுகாக்க ஐக்கியப்பட்டு அர்த்தமுள்ள நடிவடிக்கைகளை எடுத்தாக வேண்டும் அவ் உரிமையை அழிவுபூர்வமாக பயன்படுத்துவது முதலாளிவர்க்கச் சார்பான தொழிற்சங்கங்களேயன்றி தொழிலாளர் வர்க்கச் சார்பான தொழிற்சங்கங்களல்ல.

தொழிற்சங்க நடவடிக்கைகளும் வேலை நிறுத்தமும் நாசகார நடவடிக்கைகளல்ல. நாசகார நடவடிக்கைகளென்று தொழிற்சங்க நடவடிக்கைகளை தடை செய்வதை தொழிலாளர் வர்க்கம் ஒருபோதும் அனுமதிக்காது.

-ஆசிரியர் குழு-

## மைய சக்திகளின் கட்டளைக்கு அடிபணிந்த மக்களின் நடவடிக்கை வெகுஜனப் போராட்டம் அல்ல

எல்லாப் போராட்டங்களிலும் (Struggles) வெகுஜன இயக்கங்கள் பல்வேறு முனைகளில் முன்னெடுக்கப்படுவதன் அவசியம் உணரப்பட்டிருக்கும். வெகுஜன செயற்பாடு என்பது போராட்டத்திற்கு தலைமை தாங்கும் சக்திகளின் ஸ்தாபனங்களின் அங்கத்துவ எண்ணிக்கை நிறைந்ததாக இருப்பதோ அச் சக்திகளின் பொதுக் கூட்டங்களிற்கு மக்கள் வெள்ளமாக திரண்டு இருப்பதையோ குறிக்காது. போராட்டத்திற்கு. ஒரு சமூகத்தின் கடைசி அங்கத்தவர் வரை ஏதோ ஒரு வகையிலான மாதிரியான, மாதிரியற்ற, உத்தியோகபூர்வமான, உத்தியோகபூர்வமற்ற பங்களிப்பை பெற்றுக் கொள்வதே வெகுஜன செயற்பாடு அல்லது இயக்கம் எனலாம்.

அடக்கு முறைக்கு எதிரான எல்லா எதிர்ப்பு நடவடிக்கைகளும் (Resistence) போராட்டங்களாகா. ஆனால் போராட்டங்கள் எல்லாமே எதிர்ப்பு நடவடிக்கைகளை கொண்டதாக இருக்கின்றன. போராட்டங்கள் அரசியல், ஸ்தாபன, கருத்தியல் வெகுஜன நடவடிக்கைகளைக் கொண்டதென வகைப்படுத்தலாம். அந்த நடிவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் அரசியல், சமூக, பொருளாதார. பண்பாட்டு அம்சங்களும் இருக்கின்றன.

குறித்த உரிமையை வென்றெடுக்க ஒரு முனையிலன்றி பல முனைகளிலும் நடக்கும் செய்றபாடுகளே போராட்டம். ஒரு முனையில் நடப்பதோ ஒரு முனைக்காக மற்ற எல்லாவற்றையும் பயன்படுத்திக் கொள்வதோ போராட்டமல்ல.

போராட்டங்களில் அரசியல், ஸ்தாபன, கருத்தியல், வெகுஜன நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று உதவுவனவாக ஒன்றிலிருந்து ஒன்றை முற்றாக பிரித்தெடுக்க முடியாத பிணைப்பைக் கொண்டனவாக அவற்றிற்கிடையே மாதிரியான, மாதிரியற்ற, உத்தியோகபூர்வமான, உத்தியோகபூர்வமற்ற தொடர்புகளைக் கொண்டனவாக இருக்கும். அங்கு அடிப்படை கருத்துகளில், மூலோபாயத்தில் ஒருமைப்பாடு இருப்பதுடன் இயங்கு விதி, செயற்பாடு, தந்திரோபாயம் போன்றவற்றில் பன்மைத் தன்மை இருக்கலாம்.

வெகுஜன போராட்டங்கள் எப்போதுமே அரசியல் ஸ்தாபன கருத்தியல் வழிகாட்டல்களுடன்தான் நடக்கும் என்பதில்லை. போராட்டங்களின் தலைமைச் சக்திகளின் கட்டளைகளுக்கு அடிபணிந்து சேவகம் செய்வதே வெகுஜனப் போராட்டங்களாகா, வெகுஜனப் போராட்டங்கள் எப்போதுமே அரசியல் ஸ்தாபன, கருத்தியல் தேவைகளுக்காக மட்டுமே செய்யப்படுபவை அல்ல. அதேவேளை தான்தோற்றித்தனமாக முன்னெடுக்கப்படவும் முடியாது.

போராட்டங்களை மக்கள் மயப்படுத்துவது என்பது கட்டளைகளுக்கு அடிபணியும் செயற்பாடல்ல. வெகுஜனப் போராட்டங்களிலும் கூட அடிப்படை விடயங்களில் பொது உடன்பாடும் இருப்பதுடன் செயற்பாடுகளில் வித்தியாசங்களும் இருக்கலாம். அடிப்படை விடயங்களில் வித்தியாசங்கள் களையப்பட்டு உடன்பாடு இருக்கவேண்டும். செயல்பாடுகளில் வித்தியாசங்களும் இருப்பதுடன் ஜனநாயகப் பண்புகளும் சுதந்திரமும் இருக்கவேண்டும். இதன் மூலம் மக்கள் வலுவூட்டப்படுவதுடன் மக்களும் தனிநபர்களும் ஆளுமை விருத்திகட்டுப்படுகின்றனர். வரலாற்று அசைவிலும் சமூக இருப்பிலும் ஆகக்கூடிய மக்களின் பங்களிப்பு உறுதி செய்யப்படுவதுடன் மக்கள் விரோத ஜனாநாய விரோத நடவடிக்கை மேலோங்குவதற்கு இடமிருக்காது.

போராட்டத்தின் மையத்தை பாதுகாத்து முன்தள்ளுவதற்கு வெகுஜனப்போராட்டங்கள் ஓட்சிசனாக அமைவதுடன் அடக்கு முறைகள், எதிர்போராட்ட நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு காபனீரொட்சைட்டாக இருக்க வேண்டும். போராட்டத்தை வெல்ல வைப்பதற்கும் எதிரிகளை தோற்கடிக்கவும் ஏககாலத்தில் மக்களின் செயற்பாட்டில் நிகழும் மாற்றங்கள், தனிநடவடிக்கைகள் கூட்டுநடவடிக்கைகள் போன்றன வெகுஜன நடவடிக்கைகளாகும்.

மக்களை தயார்படுத்த முடியாது, மக்களை தயார் படுத்தும் வரை காத்திருக்க முடியாது என்ற நிலைப்பாடுகள் சிறு முதலாளித்துவ, அவசரவாத நிலைப்பாடுகள் ஆகும். மக்களை தயார்படுத்தி விட்டுத்தான் போராட்டங்களை செய்யவேண்டும் என்பதும் சிறுமுதலாளித்துவ குளறுபடிதான். மக்களை தயார்படுத்துவதற்கான பிரத்தியேக நடவடிக்கைகளும் அவசியம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் நடவடிக்கைகளுக்கூடாகவும் மக்கள் தயார் செய்யப்படுகின்றனர்.

தயார்ப்படுத்தலும், போராட்டங்களும் ஏககாலத்தில் இடம்பெறலாம். இதற்கூடாக மக்களின் முன்னனி படை உருவாகிறது. போராட்டத்தின் மையசக்தியுடன் இணைந்து கொள்ள அம்முன்னணி படைக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

வெகுஜனப்போராட்டங்கள் எப்போதும் ஒரே மாதிரியாகவும் ஒன்றைப்போல இன்னொன்றும் இருப்பதில்லை. ரஷ்ய, சீன புரட்சிகளில் இடம் பெற்ற வெகுஜனப் போராட்டங்கள் போன்று தற்போது வெகுஜனப்போராட்டங்களை முன்னெடுக்க முடியாது. ஒன்றைப்போன்று இன்னொன்றும் வெற்றியையோ தோல்வியையோ அடைவதில்லை. இப்படி கூறுவதன் மூலம் வெகுஜனப் போராட்டங்களையே நிராகரிக்க முடியாது. பிடல் க்ஸ்ரோ தலைமையில் கியூப ஆயுதப்புரட்சி நடைபெற்றபோது அவருடன் 84 பேர் மட்டுமே இருந்ததாக கூறுகிறார். ஆனால் இப்போது 10, 12 பேர் மட்டும் இருந்தால் மீண்டும் அவ்வாறான புரட்சியை செய்து வெற்றிகொள்ள முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார். இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது யாதெனில் அன்றைய கியூப சூழ்நிலையை விட இன்று மக்கள் புரட்சிக்கு ஆதரவாகவும் தயாராகவும் இருப்பதால் அன்றைய நிலையைவிட தனது அணியில் குறைவானவர்கள் இருந்தால் போதும் என்று அவர் கூறுகிறார். இது வெகுஜன பங்களிப்பின் சக்தியாகும். அதற்காக அணியில் குறைவானவர்களே இருக்க வேண்டுமென்பதில்லை.

வெகுஜனப்போராட்டம் என்பது ஒழுங்கமைக்கப்பபடாத ஆயுதம் ஏந்தாத படைநடவடிக்கையே. அது ஆயுதம் ஏந்திய படைநடவடிக்கையுடன் இணங்கிப் போகும் போதும் இதனுடன் ஆயுதம் ஏந்திய இராணுவ நடவடிக்கை இணங்கிப் போகும் போதும் போராட்டம் பலமடைகிறது. அதற்கு ஸ்தாபன, கருத்தியல் போராட்டங்கள் வலுவாக இருக்க வேண்டும்.

வெகுஜனப்போராட்டங்களின் மூலம் அடக்கப்படுகின்ற மக்களும், சுரண்டப்படுகின்ற பலதரப்பட்ட வர்க்கங்களும் ஐக்கியப்பட வாய்ப்புண்டு. அதனால் அங்கு வர்க்க வேறுபாடுகள் இல்லாமல் போவதுமில்லை. வர்க்கக் கட்டமைப்பு தகர்க்கப்படுவதும் இல்லை. வெகுஜனப் போராட்டம் ஒன்றினுள்ளும் புறமும் அவ்வெகுஜனப் போராட்டத்தை தீர்மானிக்கும் வர்க்கரீதியான காரணிகள் இருக்கும். வர்க்க வித்தியாசங்களை கடந்த வெகுஜனப் போராட்டங்கள் இருப்பதாக கூறுவது உண்மைக்குப் புறம்பானது. பொதுத்தேவைக்காக வர்க்க வித்தியாசங்கள் ஓரளவிற்கு சமரசம் செய்துகொள்ளப்படலாம். உலகத்தில் பெரும்பான்மையான மக்களின் விரிந்த அடையாளம் தொழிலாளர்கள் விவசாயிகள் என்பதுதான். விரிந்த பரந்த போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதுதான். விரிந்த பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் தொழிலாளர்கள் விவசாயிகளுடன் சேர்ந்து கொள்ளும் சேர்ந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்படும் ஏனைய மேல்தட்டு வர்க்கங்கள் வர்க்க அடையாளத்தை துறந்து ஆசையினால் விட்டுக்கொடுத்தோ பங்கெடுப்பதில்லை. பங்குகெடுப்பதன் மூலமும், அப்போராட்டம் வெற்றியடைந்து தொழிலாளர் விவசாயிகளின் ஆதிக்கம் கூடும் போதும் அந்த மேல் தட்டு வர்க்கங்கள் வலுவிழந்து விடுகின்றனர். அவர்கள் மீண்டும் வலுப்பெறாமல் இருந்தால் பலமுரண்பாடுகள் தவிர்க்கப்படும். அதற்கும் பல போராட்டங்கள் நடத்தப்படுவது தவிர்க்க முடியாது. குர்திர்ஷ் மக்களின் போராட்டம் தேசிய இனவிடுதலைப் போராட்டமேயன்றி வர்க்க விடுதலைப் போராட்டமல்ல. ஆனால் குர்திஷ் தொழிலாளர் கட்சியின் தலைமையிலான போராட்டத்திற்கும் ஏனைய அமைப்புகளின் போராட்டத்திற்கும் நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றன.

போராட்டங்கள் தனிநபர்களின் சாகசங்களல்ல என்பதால் பரந்துபட்ட மக்களின் பங்களிப்பு அவசியமாகும். பாலஸ்தீனர்களின் கல்லெறிதலிலிருந்தும் வெகுஜன மார்க்கம் பற்றி கற்றுக் கொள்ள நிறையவே இருக்கிறது. இல்லாவிட்டால் மையசக்திகளுக்காக மக்களை ஆயுத நடிவடிக்கைகளில் ஈடுபடுத்துவதே மக்கள் யுத்தம் என்றும் மக்கள் போராட்டம் என்று கூறும் தாழ்ந்த நிலை ஏற்பட்டு விடும். போராட்டங்கள் முன்நோக்கி நகராது.


-இ. தம்பையா-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஓட்டுக்கு வருவாக



ஓட்டுக்கு வருவாக - இளிச்சி
ஓட்டுக்கு வருவாக
கோட்டும் போட்டு கும்மாளமாய்
சாட்டுப் பல சொல்லி விட்டு
பதவி வாங்கிப் போனவக
ஓட்டுக்கு வருவாக - இளிச்சி
ஓட்டுக்கு வருவாக

அம்மணமாய் அமைச்சராய்
ஆனவக அண்ணன் தம்பி
அவகளோட சிலபேரும்
ஊருக்குப் போயிட்டாக - நம்ம
ஊரு பக்கம் காணலியே
ஆனா
எகிரி குதிச்சி, எசப்பாட்டும் பாடி
ஓட்டுக்கு வருவாக - இளிச்சி
ஓட்டுக்கு வருவாக.

சனங்க பத்தி எந்தவொரு
சங்கதியும் சங்கடமும்
கந்தனுக்கும் தெரியாது
கடம்பனுக்கும் புரியாது
உள்ளூரின் திட்டங்கள்
ஒன்னுமே கையிலில்லை
''ஓணான்'' மாதிரிதான்
உள்ளவங்க ரெண்டுபேரும்


உண்மையைச் சொல்லி வந்தவளெ
ஊருபக்கம் வரவிடாம
ஓரம் தொரத்துராக
பொய்யும் புரட்டையும்
பொல்லாத தில்லுமுள்ளும்
வெல்லாத வாக்குறுதி
வெறுமனே சொன்னவக
சங்கத்த கட்டி வச்சி
சந்தாவ வாங்கிட்டு
எங்கையா போனாங்க - அரசை
எதுக்காத மவராசங்க
இன்னுமே ஊருபக்கம்
எட்டிக் கூட பாக்கலியே
ஆனா -
ஓட்டுக்கு வருவாக - இளிச்சி
ஓட்டுக்கு வருவாக.

''அமைச்சர் பதவிக்கு ஆறு வருஷம்
இருக்கணுமா? ''............ இவன் தம்பி.
''மானமிருந்தா ......? இவன் அண்ணன்
மகிந்த சிந்தனைக்கு மசங்கி இருப்பானா?
கோணாங்கி ஆடி கொழுத்துராங்க
கொழுத்திராங்க ரெண்டு பேரும்
அம்மணமா ஆடுறது
அவகளுக்கே தெரியாதோ?

''குஞ்சி பொறி'' லயத்து மக்கள்
கும்மி எரியிரதும்
வாழமல வடபழனி
வக்கத்து நிக்கிறதும்,
அரிசி தோட்ட அம்மாசிய
ஆமிக்கார தொரத்துரதும்
மிடிலிடன் மீனாட்சி
மெலிஞ்சி செத்துப் போனதுவும்
எங்கண்ணன் தம்பிக்கு
எப்பவும் வெளங்காது
குளிச்சி மினுக்கிட்டு
குசும்பு ராசா ரெண்டு பேரும்
எப்ப வருவீக! எப்ப வருவீக!!
கிளிச்சி ஓட்டு
வாங்கி போக


**-சந்திரலேகா கிங்ஸ்லி-**

# தொண்டமான் நூற்றாண்டு: எதைக் கொண்டாடுவது?



காந்தித்தாத்தா சுதந்திரம் வாங்கித் தந்தார் என்பது போல தொண்டமான் தாத்தா மலையகத் தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை வாங்கித் தந்தார். சம்பள உயர்வு வாங்கித் தந்தார் பாடசாலைகளை வாங்கித் தந்தார் என்று நீளமாக ஒரு 'வாங்கித் தந்தார்' பட்டியல் போடுகிற நேரம் இது. தொண்டமான் தாத்தா தனக்கும் தனக்கு வேண்டப்பட்ட ஆட்களுக்கும் வாங்கித் தந்தது என்ன என்று யாரும் நமக்குச் சொல்ல மாட்டார்கள். அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் அவருடைய அரசியல் வாரிசு என்று சொல்லுகிற பேரன் அவருடைய் அரசியலின் நாசூக்கு இல்லாத முரட்டு வாரிசு. ஆனாலும் தாத்தாவுக்கு ஏற்றாற் போல ஒரு பேரன்.

மலையகத் தமிழ் மக்களுடைய பிரஜாவுரிமை மறுக்கப்பட்ட காலத்திலும் அவர்களுடைய பிரதிநிதிகளாக இருந்த தலைவர்கள் மலையகத் தமிழ் மக்களைத் தங்களுடைய பிரஜாவுரிமைக்காகத் தொடர்ந்து போராடச் சொல்லவில்லை. தொழிற் சங்கங்களில் திரட்டக் கூடிய சந்தா தொகைக்குச் சேதம் இல்லாத அளவோடு அவர்கள் திருப்திப் பட்டுக் கொண்டார்கள். மலையகத் தமிழ் மக்களின் கல்வியோ வீட்டு வசதியோ வேறு தொழில் வாய்ப்போபற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எப்போதும் அக்கறை காட்டியதில்லை. மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்ட பிறகு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கு ஒரு தெளிவான அரசியல் பாதை உருவாகாததற்குக் காரணம் அதுவரை இந்தியாவே சொந்தநாடு என்று சொல்லி காந்தியையும் நேருவையும் தலைவர்களாகக் காட்டி மொத்த விற்பனை அரசியல் நடத்தியவர்களுக்கு வெகுஜன அரசியல் விளங்காது என்பது மட்டுமில்லை, வெகுஜன அரசியல் அவர்களுடைய தொழிற்சங்க ஆதிக்கத்துக்கு ஆபத்தானது என்பது முக்கியமானது. மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் நடுவில் இடதுசாரிச் சிந்தனை பரவினால் அது அவர்களுடைய தோட்ட முதலாளித் தலைவர்களைப் பாதிக்கும் என்பதை அறிய முடியாத முட்டாள்களில்லையே தலைவர்கள். எனவே தோட்டத் தொழிலாளரை நிலவுடைமைக்கால சமத்துவச் சிந்தனைகள் மட்டுமில்லாமல் வர்க்க அடிப்படையிலான அரசியல் தலைதூக்காமல் தடுப்பதும் மிகவும் தேவையாக இருந்தது. இதை நடைமுறைப்படுத்தத் தோட்டங்களில் செயற்பட்டு வந்த அதிகார அடுக்குகள் பயன்பட்டன. கொஞ்சம் வித்தியாசமாக மலையக மக்களுக்கு முற்போக்கான அரசியலை அறிமுகப்படுத்தத் துணிந்த தலைமைகள் பலவேறு சாதி, மத, சமூக அடையாளங்களைப் பாவித்துக் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு வெளியே பரவாமல் கவனித்துக் கொள்ளப்பட்டது. அதைவிட, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைமைக்கும் தோட்ட முதலாளிமாருக்கும் இருந்து வந்த நல்லுறவும் தொழிற்சங்க துறையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதிக்கம் தொடர உதவியது. தோட்டங்களில் வெளியார் நுழைவதற்கு இருந்து வந்த கட்டுப்பாடுகள் யாருக்கு வசதியாக இருந்தன என்று இங்கே விளங்கப்படுத்த வேண்டியதில்லை.



சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தத்தை எதிர்த்துக் கூட மலையகத் தமிழ் மக்களின் பிரதான தலைமையாக இருந்து வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எந்தவிதமான போராட்டத்தையும் தொடர்ந்து முன்னெடுக்கவில்லை. ஆயிரக்கணக்கில் தொழிலாளர்களின் குடும்பங்கள் 1970களில் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதற்குப் பின்பு சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு விகிதாசாரமாக மலையகத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினருக்குக் கிடைத்த வாக்குரிமை தொண்டமானின் பேரம் பேசுகிற அரசியலுக்கு அத்திவாரம் இட்டது. 1974ல் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டபோது பல தோட்டங்களிலிருந்து மலையக மக்கள் பல நெருக்குவாரங்களை எதிர்நோக்கியும் அடுத்தடுத்து வந்த ஆண்டுகளில் பல தோட்டங்களில் வேலையின்மையால் தோட்டங்களிலிருந்து வெளியேறி வறுமையில் வாடினர். இச் சூழ்நிலையிலேயே கணிசமான மக்கள் இந்தியாவுக்குச் செல்ல உடன்பட நேர்ந்தது.

பாராளுமன்ற இடதுசாரிகள் ஆளுங்கட்சியுடன் இருந்ததால் பொதுவாகவே இடதுசாரிகள் மீதான நம்பிக்கை தளர்ந்து மலையகப் பிரதேசவாதத்தோடு தேசியாவாத உணர்வும் வலுப்படத் தொடங்கியது. இவற்றில் எதையுமே உரிமைகட்கான போராட்டமாக வளர்த்தெடுக்கிற நோக்கத்துடன் கையாளப்படவில்லை. மாறாக தொண்டமான் ஒரு புறம் ஜே.ஆர்.ஜயவர்த்தனவுடனும் இன்னொரு புறம் ஜயவர்த்தனவின் ஆசிகளுடன் தமிழர் ஜக்கிய முன்னணியுடனும் அரசியல் கூட்டு ஏற்படுத்தினார். 1976ல் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்பட்டுத் தமிழீழக் கொள்கை பிரகடனம் செய்யப்பட்ட போது தொண்டமான் மெல்ல ஒதுங்கிக் கொண்டார்.

தொண்டமான் யூ.என்.பி அரசாங்கத்தில் கூட்டணியாக இருந்த போது 1980ல் மலையக மக்களுக்கு எதிரான பேரினவாத வன்முறையை மலையகம் தழுவிக் கட்டவிழ்த்து விடப்பட்டது. 1983இலும் மலையக மக்கள் பாதிக்கப்பட்டனர். எனினும் தொண்டமான் அமைச்சர் பதவியிலிருந்து விலகவில்லை. எல்லா ஆட்சி மாற்றங்களினூடும் தொண்டமானால் அமைச்சராகத் தொடர முடிந்ததற்குக் காரணம் அவருடைய அரசியல் பதவியும் சலுகைகளும் பற்றியதாக இருந்தது தான்.

அதேவேளை, தொண்டமான் தலைமையை மீறியும் அவரது வழிகாட்டலுக்குக் காத்திராமலும் நடத்திய பலவேறு போராட்டங்கள் மூலமே எஞ்சியிருந்த மலையக மக்களுக்கு வாக்குரிமை உட்பட்ட பலவேறு உரிமைகள் கிடைத்தன. இதில் மலையகத்தில் உருவாகி வந்த கல்வி பெற்ற இளைய தலைமுறை ஒன்றின் பங்கு முக்கியமானது. அவர்கள் எழுப்பிய கேள்விகளாலேயே மலையக மக்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மேலிருந்த அதிருப்தி வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. அதைப் பயன்படுத்தி மாற்று அரசியலை முன்வைப்பதாக வெளிக்கிளம்பிய மலையக மக்கள் முன்னணி இலங்தை் தொழிலாளர் காங்கிரஸ் போல பதவி, சலுகைகட்கான பேரம் நடத்துகிற கட்சியாக மாறச் சில ஆண்டுகளே போயின.

தோட்டத் தொழிலாளர்களுடைய அதிருப்தி வெளிப்படும்போது போராட்டக் கோலம் பூண்டு வீரம் பேசுவதும் திரைக்குப் பின்னால் முதலாளிமாருடனும் அரசாங்கத்துடனும் பேரம் பேசித் தொழிலாளர்களின் கோரிக்கைகளைக் கைகழுவித் தனக்கும் தனக்கு நெருக்கமானவர்களுக்கும் சலுகைகளை வாங்கிக் கொள்வதும் தாத்தா தொண்டமான் காட்டிய வழி. இதுவரை மலையக மக்களைப் பாதித்த எந்தப் பிரச்சனையையும் போராடி வெல்லுவதற்குத் தடையாகவே தொண்டமான் வழிவந்தவர்களுடைய அரசியல் பயன்பட்டிருக்கிறது.

தொண்டமானைப் பற்றிய திறமைசாலி, ராஜதந்திரம் அறிந்தவர் என்கிற விதமான படிமங்கள் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன. இதில் வீரகேசரி போல பத்திரிகைகள் முக்கிய பங்கு வழங்கியிருக்கின்றன. ஆனால் தொண்டமானின் திறமையும் ராஜதந்திரமும் காரிய வல்லமையும் யாருக்குப் பயன்பட்டது என்று கவனித்தால் மலையகத்தின் வசதி படைத்த ஒரு பகுதியினருக்கே என்று விளங்கும்.

தொழிலாளரின் குறைந்தபட்ச ஊதியப் பிரச்சனை வீட்டுப் பிரச்சனை காணிப் பிரச்சனை கல்விப் பிரச்சனை பேரினவாதிகளிடமிருந்து பாதுகாப்புப் பற்றிய பிரச்சனைகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைமை அன்று தொடங்கி இன்று வரை எதைச் சாதித்திருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தால் தொண்டமான் என்கிற எலி பிடிக்கிற பூனை யாருக்காக எலி பிடித்தது என்று விளங்கும்.

தொண்டமானை மலேசியாவின் டத்தோ சாமிவேலுவுடன் சிலர் ஒப்பிட்டுப் பேசுவார்கள். அதில் முக்கியமான ஒற்றுமைகள் உள்ளன. மக்களின் பின்தங்கிய நிலையையும் கல்வியின்மையையும் மூலதனமாக்கியே சாமிவேலுவின் அரசியல் நடந்து வந்துள்ளது. மலேசியாவின் பேரினவாத ஆட்சியாளர்களுடன் சமரசம் செய்து தமிழ் வணிகர்களை அவர் உயரச் செய்திருக்கிறார். ஆனால் இன்றும் மலேசியாவின் மிகவும் பின்தங்கிய சமூகம் அங்கு வாழும் இந்திய வம்சாவழி தமிழர்கள்தான். இன்று அவர்களுடைய வாழ்க்கைத்தரம் சிறிது உயர்ந்திருக்கிறது என்றால் அது மலேசியா 1980 களின் பின்பு கண்ட பொருளாதாரச் செழிப்பால்தானே ஒழிய சாமிவேலுவின் வழிகாட்டலாலல்ல.

தொண்டமானின் எதேச்சாதிகாரத் தலைமைக்கு எதிராகக் குரல்கள் 1990 களில் எழுந்தது போல டத்தோ சாமிவேலுவுக்கு எதிராகவும் எழத் தொடங்கியுள்ளது. மலேசியத் தமிழ் மக்கள் அரசியல் தெளிவுபடத் தொடங்குகிற போது சாமிவேலுவின் நாடகமும் தன்னுடைய முடிவை நெருங்கி விடும்.

தொண்டமானின் அரசியலைச் சரியாக விளங்கிக் கொள்ளாமல் அவர் பற்றிய மயக்கங்கள் இருப்பதாக நான் நம்பவில்லை. அவை அந்த அரசியலால் நன்மை பெறுகிற ஒரு கூட்டத்தினர் வேண்டுமென்றே உண்டாக்கியவை. மலையக மக்களின் அரசியல் எழுச்சிக்கு அந்த விதமான புனைக்கதைகளை எல்லாம் வெளிச்சத்துக்குக் கொண்டு வருவது அவசியமானது.

**- ஆறுமுகசாமி -**

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 5

## வாழ்வும் வழிபாடும்

பேராசிரியர் சி.சிவசேகரம்

கடவுள் கொள்கையுடைய மதங்களில் இறை வழிபாடு ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது. கடவுட் கொள்கையை அடிப்படையாகக் கொள்ளாத புத்த மதத்திற் கூடப் புத்தர் வழிபாட்டிற்குரிய ஒருவராக்கப்பட்டுள்ளார் என்பது போக வேறு பல கடவுளரும் வழிபடப்படுகின்றனர். வழிபாடு பொதுவாக இரண்டு தளங்களில் நிகழுகிறது. ஒன்று ஒருவரது தனிப்பட்ட சமய நம்பிக்கையும் கடைப்பிடித்தலும் பற்றியது. தனது வீட்டுச் சூழலிலோ பிற இடங்களில் மிக அந்தரங்கமான முறையிலோ ஆகக்கூடியது குடும்பத்தினர் போன்று மிக நெருக்கமானவர்களின் பங்குபற்றுதலுடனோ பெலும்பாலும் அன்றாட நடைமுறையாக அது நடைபெறுகிறது. பண்டிகைகள், விரதம், நோன்பு போன்றவற்றுக்குரிய சிறப்பான நாட்களில் பிறரும் பங்கு பற்றுவதற்கு இடமிருப்பினும் வீட்டுச் சூழலில் நடக்கும் வழிபாட்டு நடைமுறைகள் ஓரளவு நெகிழ்வானவையும் தனிப்பட்ட நேர வாய்ப்பு வசதிகட்கேற்ப மாற்றியமைக்கக் கூடியனவுமாகும். தீவிர மத நம்பிக்கையும் ஆசாரப் பிடிப்புமுடையோரது நடைமுறை மிகவும் இறுக்கமானதும் கட்டுப்பாடானதாயும் சடங்குத் தன்மை மிகுந்தும் இருப்பது உண்மையேனெனினும் பொதுப்பட வழிபாட்டு நடைமுறைகளை ஒருவர் தனது எண்ணப்படி மாற்றியமைக்க இடம் உண்டு. அதைவிட, எவருமே இன்னொருவர் தனிப்பட்ட முறையில் எவ்வாறு வழிபடுகிறார் என்பது பற்றிக் கேள்வி எழுப்புவது அருமை. முக்கியமாகச் சமயப் பிரமுகர்கள் போன்ற பிறருடைய ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் ஒருவரது தனிப்பட்ட வழிபாட்டு முறையில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். தனிப்பட்ட கவலைகள், நிம்மதியின்மை போன்ற பிரச்சனைகளும் ஆன்மிகத் தேடல்களும் தியானம் மாந்திரிகம் போன்ற நடைமுறைகட்குக் காரணமாகலாம். எனினும் பாரிய அளவிலான பண்பாட்டு வேறுபாடுகளற்ற ஒரு கிராமச் சூழலிற் கூட வழிபாட்டு முறைகள் வீட்டுக்கு வீடு வேறுபடலாம். பிற நம்பிக்கைகளுடன் தொடர்புகள் ஏற்படக் கூடிய நகரச் சூழலொன்றில் இவ்வாறான வேறுபாடுகள் அதிகமாகலாம்.

சமூகத் தளத்திற் கடைப்பிடிக்கப்படுகிற வழிபாட்டு முறைகள் கோவில்கள் போன்ற பொது வழிபாட்டுத் தலங்கள் சார்ந்தவை. இவ்வாறான வழிபாட்டு முறைகள் ஒரு சமூகத்தாற் பொதுவாக ஏற்கப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையிலானவை. ஒரு கோவிலுக்குள் ஒருவர் சென்று தனிப்பட்ட முறையில் வழிபட்டுச் செல்ல முடியும். எனினும் கோவில் வழிபாடு பூசை முறைகள் முதலாக வழிபடுவோரது வழிபாட்டு முறை வரையிலான பல விடயங்களிலும் விதி முறைகளாற் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். கோவில்களில் நடத்தப்படும் சிறப்பு பூசைகள் தனிப்பட்டவர்களது வேண்டுதல்களின் அடிப்படையில் நடத்தப்பட்டாலும், அவை யாவும் பொதுவான சில நடத்தை விதிகட்கு உட்பட்டவை. கோவில் வழிபாட்டில் சடங்குகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. சடங்குகள் எனும் போது இந்து மதம் எனப்படுகிற வரையறைக்குட்படுகிற மதங்கள் சார்ந்த கோவில்களின் விரிவான சடங்குகள் போல கிறிஸ்தவ தேவாலயங்களிற் கடைப்பிடிக்கப்படுகிற ஆசார அனுட்டானங்கள் இல்லை. உருவ வழிபாடில்லாத இஸ்லாத்தில் தொழுகை தொடர்பான சில நடைமுறைகள் சடங்குகளாகவே கடைப்பிடிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் பிராமணிய வழிபாட்டு முறையை உடைய கோயில்களில் வழிபாட்டின் பெரும்பகுதி சடங்குகளாலானது என்ற வகையில் அது பிற மதங்களினின்றும் மிகவும் வேறுபடுகின்றது. புத்த மதத்தில் பூசகர்கள் இல்லை. எனினும் வழிபாட்டிற்குரிய தலங்கள் உள்ளன. ஏற்கப்பட்ட சில சமூக நடைமுறைக்கேற்ப மக்கள் அன்றாடமோ விசேட நாட்களிலோ வழிபட்டுச் செல்லுகின்றனர்.

எல்லா வழிபாட்டு முறைகளிலும் சமூகத்தில் ஏற்படுகிற மாற்றங்கள் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. தொழில்நுட்பம் கோவில்களின் நிர்மாணத்தில் மட்டுமில்லாமல் வழிபாட்டுடன் தொடர்பான பல நடைமுறைகளிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தனது பாதிப்பைக் காட்டி வருகின்றது. பள்ளி வாசலிலிருந்து ஒலிக்கிற பாங்கு முதலாகக் கோவிற் திருவிழாக்களின் போதும் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் பாடப்படும் துதிப்பாடல்கள் வரை இப்போது ஒலிபெருக்கி மூலமே வழங்கப்படுகின்றன. முக்கியமாகச் சடங்குகளின் போது பாவிக்கப்படுகிற அலங்கார வேலைகள் மின்சாரத்தின் துணையுடனேயே இயலுமாகின்றன. அதேவேளை, சடங்குகள் மிகுதியாகவுள்ள வழிபாட்டு முறைகளில் எல்லா நடைமுறைகளையும் மரபின் பேரால் நியாயப்படுத்துகிற போக்கை நாம் காணலாம்.

நகரப் பகுதிகளில் அமைந்துள்ள கோயில்களில் கோவில் சார்ந்த சமூகங்களில் ஏற்படுகிற சமூக நிலை மாற்றங்கள் வழிபாட்டு முறைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. இந்து சமூகங்கள் போன்று வர்ணாசிரம சாதியக் கட்டுப்பாடுகள் சமூக மாற்றங்கட்கு முகங் கொடுக்க இயலாமல் தளருகிற போது அதன் விளைவுகள் சமூக உறவுகளிலும் வழிபாட்டு முறைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. இந்த விதமான மாற்றங்கள் ஒரு புறம் அன்றாட வாழ்வில் ஏற்படுகிற மாற்றங்களாலும் அவை ஏற்படுத்துகிற நிர்ப்பந்தங்களாலும் தீர்மானிக்கப்பட்டாலும் இன்னொரு புறம் பழமைவாதத்தின் பிடியினின்று விடுபட இயலாமலும் கற்பனையாகவோ மீளப் புனையப்பட்டோ மரபொன்று வலிந்து அடையாளப்படுத்தப்படுகிற நடைமுறைகளைக் கொண்டவையாகவும் அமைகின்றன.

மரபு வழி வந்தவை எனக் கூறப்படுகிறவை தொன்மையின் அடிப்படையிற் புனிதப்படுத்தப்படுகின்றன. எந்த நடைமுறையையும் கேள்விக்கு உட்படுத்த இயலாமல் நமது முன்னோர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்த சடங்கு சம்பிரதாயங்கள் என்ற விதமாகவே கோவில் வழிபாட்டு நடைமுறை நியாயப்படுத்தப்படுகிறது. அந்த விதமான நியாயங்களை எளிதாகவே பொய்ப்பிக்கக் கூடியவாறு ஒரு மதத்திற்குள் மட்டுமன்றி அதன் பிரிவுகட்குள்ளும் பிரதேசத்திற்குப் பிரதேசமும் ஊருக்கு ஊரும் சடங்கு சம்பிரதாயங்கள் வேறுபட்டாலும் புனையப்பட்ட ‘‘மரபு” பற்றிய மாயைகளைக் களைவது எளிதல்ல. மாறாகப் புரட்சிகரமான சமூக மாற்றங்களின் விளைவாக உருவான மாற்று நடைமுறைகள் காலப் போக்கிற் சீரழிந்தும் சிதைந்தும் போவது மட்டுமில்லாமல் சமுதாயத்தில் வலுவாக உள்ள அதிகார வர்க்கத்தின் ஆதிக்கச் சிந்தனையுடன் சமரசம் செய்கின்றன. இதற்கான உதாரணங்களைப் பிராமண மதச் சடங்கு சம்பிரதாயங்களை நிராகரித்தும் சீர்திருத்த நோக்கிலும் உருவான இந்து மத எல்லைகட்குட்பட்ட மாற்றுச் சிந்தனை வழிப்பட்ட மதப்பிரிவுகளுள்ளும் நிறுவனங்களுள்ளுங் காணலாம்.

இந்திய என்கிற அடையாளத்திற்கும் தேசிய இன அடையாளத்திற்குமிடையிலான முரண்பாடு போல இந்து என்கிற அடையாளத்திற்கும் குறிப்பான ஒரு இந்து மதத்திற்கும் அதனுள் அமைந்த பிரிவுகட்குமிடையிலான முரண்பாடுகள் அமைகின்றன. அடிப்படையில் இவை மேலாதிக்கம் சார்ந்த முரண்பாடுகளே. ஒரு பெரும்பான்மை அடையாளத்தை இழக்காமல் அப் பெரும்பான்மைக்குட் தன்னைக் கரைத்துக் கொண்டு தனது தனித்துவமான அடையாளத்தையும் இழக்க இயலாமல் தடுமாறுகிற ஒரு பண்பை நாம் மதங்களிற் காணலாம். தத்தமது அடையாளங்களை மதத்தின் அதி உண்மையான விளக்கம் சார்ந்தவை என்றோ தொன்மையானவை என்றோ காட்டுகிற போக்கை நாம் பரவலாகக் காணலாம். அதேவேளை குறிப்பிட்ட நடைமுறைகள் கூடிய சமூகப் பொருத்தப்பாடுடையவை என்றும் பகுத்தறிவு சார்ந்தவை என்றும் காட்ட விரும்புகிற போக்குகளையும் காணலாம்.

வழிபாட்டு முறைகளும் அவை சார்ந்த சடங்கு சம்பிரதாயங்களும் மரபின் பேராலேயே பெருமளவும் நிலை நிறுத்தப்பட்டாலும் இன்று அவற்றை விஞ்ஞான ரீதியாக விளக்கி நியாயப்படுத்துகிற தேவையையும் நாம் காணுகிறோம். சடங்கு சம்பிரதாயங்களில் ஒவ்வொன்றையும் விளக்கவும் நியாயப்படுத்தவும் நமது முன்னோரின் அறிவும் ஆழ்ந்த ஞானமும் பற்றிய புனைவுகள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறான புனைவுகளில் வரலாற்று உண்மைகள் திரிப்புக்கும் மறுப்புக்கும் உள்ளாகின்றன. பகுத்தறிவும் விஞ்ஞானமும் சாட்சிக்கு அழைக்கப்பட்டு வசதிக்கேற்றபடி திரிக்கவும் குறுக்கவும்படுகின்றன.

வழிபாட்டு முறைகளிற் காலத்தையொட்டி ஏற்படுகிற மாற்றங்களை அறிந்தும், புதிது புதிதாகப் புனையப்படுகிற சடங்குகளுக்குத் தொன்மையின் பேரிலும் மரபின் பேரிலும் நியாயங் கற்பிக்கப்படுவது ஏன் என்பதைப் பற்றி நாம் ஆழச் சிந்திக்க வேண்டும். நம் மீது மரபின் பிடிப்பு வலுவானது. ஆயினும் அது தளர்த்த இயலாததல்ல. தளர்த்தப்படாததுமல்ல. எனினும் மரபின் பேரால் நமது சமூக நடைமுறைகளை நியாயப்படுத்துவது வசதியாகவுள்ளது. இதற்கான ஒரு காரணம் நாம் உலகச் சூழலின் கட்டாயத்தால் நவீனத்துவத்திற்குள் இழுத்துவரப்பட்டாலும் நிலவுடைமைச் சமூகச் சிந்தனையிலிருந்து முற்றாக விடுபட இயலாதுள்ளோம் என்றே நினைக்கிறேன். அரை நிலப் பிரபுவத்துவ அரைக் கொலனிய என்றவாறு பல ஆசிய சமுதாயங்களை வருணிப்பது உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் செல்லாமற் போனாலும் சிந்தனைத் தளத்தில் நிலப்பிரவுத்துவமும் நவ கொலனியாதிக்கத்திற்குப் பணிவான மனநிலையும் இன்னமும் கணிசமான ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. மாறி வருகிற நமது வழிபாட்டு முறைகளிலும் விறைப்பான அணுகுமுறையின் நடுவே வசதி கருதி நிகழும் சமரசங்களிலும் நாம் நமது சமூகத்தின் நெருக்கடியான நிலையின் பிரதிபலிப்புக்களைக் காணமுடிகிறது. ■

## வடக்கு கிழக்கைப்.......

1ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டுமா இல்லையா என்பதை முடிவிற்கு கொண்டு வரும் வகையிலான பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கையின் அடிப்படையிலான மாகாணசபைகள் திட்டத்தின் கீழ் இலங்கையின் ஒன்பது மாகாணங்களை அங்கீகரித்து அவற்றில் வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப்பட்டு ஒரே மாகாணமாக இயங்கும் என ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த இணைப்பு ஒவ்வொரு வருடமும் ஜனாதிபதியின் பிரகடனத்தின் மூலம் நீடிக்கப்படலாம் என்றும் அவற்றை பிரிக்க வேண்டுமா இல்லையா என்பதற்கு நிரந்தரமான முடிவெடுப்பதற்காக கிழக்குமாகாண மக்களிடம் பொதுசன அபிப்பிராய வாக்கொடுப்பை நடத்த ஜனாதிபதி பிரகடனஞ் செய்யலாம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண மக்களில் பெரும்பான்மையானோர். கிழக்கு மாகாணம் வடக்குடன் இணைந்திருப்பதை விரும்பவில லையென வாக்களித்தால் வடக்கு வேறான மாகாணமாகவும் கிழக்கு வேறான மாகாணமாகவும் இயங்க வேண்டிவரும்.

வடக்குடன் கிழக்கு இணைதிருப்பதை பேரினவாத சக்திகள் விரும்பவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் விரும்புவதாக இல்லை. இலங்கை- இந்திய சமாதான ஒப்பந்தத்தின் கீழான மாகாணசபைகள் சட்டத்தினால் அவருக்கு இருக்கின்ற அதிகாரத்தை கொண்டு பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தி வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டுமென்ற பேரினவாத எண்ணத்தை நிறைவேற்றி வைக்கப் பார்க்கிறார்.




வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பது கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை உரிமையை மீறுவதாக ஜே. வி. பி உயர்ரீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தது. அம்மனுவை எதிர்த்து வடக்கு கிழக்கு இணைப்பை ஆதரிப்போர் தாக்கல் செய்த விண்ணப்பங்களை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் ஜே. வி. பியின் மனுமீதான வாத விவாதங்கள் முடிவடைந்துள்ளன. வெகுவிரைவில் வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா பிரிந்திருக்க வேண்டுமா என்பது பற்றி உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்க இருக்கிறது.

முஸ்லீம் கட்சிகளில் அதிகமானவை வடக்கு கிழக்கு இணைப்பை அவர்களின் சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாட்டில் நின்று எதிர்க்கின்றன. சிங்கள பேரினவாத ஜே. வி. பி, ஹெல உறுமய, சுதந்திரக்கட்சி, ஐ. தே. கட்சி போன்றனவும் எதிர்க்கின்றன. த. வி. பு இயக்கத்திலிருந்து கிழக்குமாகாணத்தை சேர்ந்த கருணா தலைமையில் பிரிந்த குழுவிற்கும் த. வி. பு இயக்கத்திற்கும் பாரிய வேறுபாடுகள் இருப்பதுடன் மோதல்களும் நடக்கின்றன.

தொடர்ச்சி 9ம் பக்கம் ⇨

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்







# தலைவர் வழிபாட்டில் தவறவிடக் கூடாத வரலாறு:

## மர்ஹூம் அஷ்ரப் பற்றிய ஒரு மீளாய்வு



முஸ்லிம் காங்கிரஸ் மர்ஹூம் அஷ்ர.்.ப் பற்றிய அஞ்சலிக் கட்டுரைகள் செப்டெம்பர் முதல் பகுதியில் பல நாளேடுகளிலும் வெளிவந்தன. அஷ்ர.்.பின் விபத்து (அல்லது திட்டமிட்ட கொலை) நடந்த பின்பு அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும் முஸ்லிம் தேசியத்தின் அதி உன்னத தலைவராகவும் இன்னும் பல வகையிலும் மதிப்பேற்றம் பெற்றிருக்கிறார். நல்ல வேளையாக அவர் முஸ்லிம் தேசத்தின் மகா கவிஞர் என்று யாரும் நமக்குச் சொல்ல முயலவில்லை. அஷ்ர.்.ப்பை இலங்கை முஸ்லிம் சமூகத்தின் உன்னதமான வழிகாட்டி என்று போற்றுவது அவர் வளர்த்தெடுத்த சந்தர்ப்பவாத அரசியலின் பலவேறு லாபங்களை ஆண்டு அனுபவிப்பதில் ஏற்பட்டுள்ள போட்டியில் களமிறங்கியிருக்கிற முஸ்லிம் காங்கிரசின் தான்தோன்றித் தலைவர்கட்கும் அவர்கள் உண்டுபண்ணிய பிளவுகளின் விளைவான பலவேறு குழுக்களின் பிரமுகர்களுக்கும் பயனுள்ளது. போகிற போக்கில், அஷ்ர.்.பின் தகைமை முகம்மது அலி ஜின்னாவின் அளவுக்கு அல்லது அல்லாமா இக்பாலின் அளவுக்கு அல்லது அவைகளை மிஞ்சி வளரும் அபாயம் உண்டு. அஷ்ர.்.ப்பை விமர்சித்த எந்த ஒரு முஸ்லிமும் வாய் திறக்க முடியாத விதமாக ஒரு மாயையைக் கட்டியெழுப்புவது அஷ்ர.்.ப்புடன் கூடியிருந்து இப்போது அவரின் பெயர் சொல்லிப் பிழைப்பு நடத்துகிற சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு அவர் வாழ்ந்த காலத்திலே அவரது அரசியல் சந்தர்ப்பவாதத்தை விமர்சித்து வந்த முஸ்லிம் தேசியவாதக் கிளர்ச்சிக்காரர்களுக்கும் அவரால் விலைக்கு வாங்கப்பட்டு அவரைப் பற்றிய விமர்சனங்களை அடக்கி வாசித்த பேர்வழிகளுக்கும் பிறருக்கும் இன்று தேவைப்படுகிறது. அஷ்ர.்.ப் இருந்த போது இருந்ததைவிட அவரது பெறுமதி; வாக்கு எண்ணிக்கையில் மட்டுமில்லாமல், சம்பாத்தியங்களிலும் பலமடங்கு அதிகமாயுள்ளது.

அஷ்ர.்.ப் என்கிற தனிமனிதரை அவர் இறந்த பின்பு நிந்திப்பது பண்பான காரியமில்லை. ஆனால் அஷர.்.ப் என்கிற அரசியல்வாதியைச் சரிவர விமர்சிக்க மறுப்பது அவரது அரசியல் பாதையால் (அல்லது இன்னும் சரியாகச் சொன்னால் பாதை இல்லாமையால்) பெரும் நட்டங்களுக்கு முகங் கொடுக்கிற கிழக்கு இலங்கை முஸ்லிம்களுக்குச் செய்யப்படுகிற துரோகமாகும். எனவே தான் அவரது அரசியல் வாழ்வும் முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி முஸ்லிம் தேசியவாதம் என்ற பேரால் நடத்தி வந்திருக்கிற அரசியல் வியாபாரமும் கவனமாக விமர்சிக்கப்பட வேண்டும். முஸ்லிம்களிடையே அஷ்ர.்.ப் விமர்சிக்கப்படுவதற்கெதிரான விதிகளை நமது கிழக்கு முஸ்லிம் அரசியல் திருட்டுக் கும்பல்கள் பிறப்பிக்க ஆயத்தமாகிறார்கள். அந்த விதிகள் நிரந்தரமான விதிகளாகி கிழக்கின் முஸ்லிம்களை மேலும் அரசியல் அந்தரங்கத்திற்குள்ளே தள்ளுவதற்குள்ளாக அஷ்ர.்.ப்பின் அரசியல் நேர்மையான விவாதத்திற்குரிய விசயமாக வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவு நிலைப்பாட்டில் உருவாகித் தமிழ் தேசிய எழுச்சியை ஒட்டி முஸ்லிம் மக்களிடையே தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழீழ விடுதலைக் கோரிக்கைக்கும் ஆதரவான சூழ்நிலை வளர்ந்த போது, அஷ்ர.்.பின் அரசியல் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவாக இருந்தது. இவ்வாறான அரசியல் கிழக்கிலங்கை முஸ்லிம் தலைமைகட்குப் புதியதில்லை. இது பாராளுமன்றப் பதவி பற்றிய கணிப்புகளின் அடிப்படையிலான அரசியலாகும். என்றாலும் பாராளுமன்றத் தேர்தல் தொகுதி அடிப்படையை விட்டு மாவட்ட அடிப்படையில் அமைந்த பிறகு அதிலும் முக்கியமாக தமிழ் விடுதலை இயக்கங்களது நடத்தை முஸ்லிம்களது நலன்களுக்குப் பாதகமாக அமையத் தொடங்கிய நிலமையில் முஸ்லிம் இன அடிப்படையில் அரசியலை முன்னெடுப்பதில் லாபம் இருந்தது. தமிழ் வாக்காளரில் தங்கியிருக்காமல் பாராளுமன்ற நாற்காலிகளை உறுதிப்படுத்த முடியுமான சூழ்நிலையில், தமிழ் முஸ்லிம் முரண்பாடுகளில் சமநிலையைப் பேணாமல் ஒரு தரப்பின் நலன்களை மட்டுமே வற்புறுத்துவது தமிழ் பாராளுமன்ற அரசியல்வாதிகட்குப் போல முஸ்லிம் பாராளுமன்ற அரசியல்வாதிகட்கும் மிகவும் பயனுள்ளதாகியது.

அஷ்ர.்.ப் முஸ்லிம் சமூகம் என்ற அடிப்படையில், மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் உள்ள ஆதரவுத் தளத்தின் மீது தனது அரசியலைக் கட்டியெழுப்பினார். பின்பு அது திருகோணமலை மாவட்டத்திற்கும் விரிக்கக் கூடியதானது. என்றாலும் முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையிலும் இலங்கை முழுவதும் பரவியுள்ள இந்தத் தேசிய இனம் முகங்கொடுக்கிற தேசிய இன ஒடுக்கல் பிரச்சினைகளை எப்படிக் கையாளுவது என்பது பற்றியும் அஷ்ர.்.பிடம் தெளிவு இருக்கவில்லை. நானறிய 1980 அளவில் மாக்ஸிய லெனினியவாதிகள் தமிழ்த் தேசியவாதிகள் முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் தமிழ் தேசிய இனம் என்ற எல்லைக்குட்படுத்தித் தமது தேசியவாத அரசியலை முஸ்லிம் மலையகத் தமிழ் தேசிய இனங்கள் மீது திணிக்கிற முயற்சியைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் தமிழீழத்தின் துரோகிகள் என்று நிந்திக்கப்பட்டார்கள். இன்றும் முஸ்லிம் தேசிய இனம் பற்றியும் அதன் தேசியப் பிரச்சினையின் தீர்வு பற்றியும் குழப்பமான சிந்தனைகளே முஸ்லிம் தலைமைகளிடையில் இருக்கிறது. தென்னிலங்கையின் முஸ்லிம் தலைமைகளின் அணுகுமுறை நகர்ப்புறத்து முஸ்லிம் வணிக மேட்டுக் குடிகளின் நலன்களையே வற்புறுத்தி வந்திருக்கிறது. கிழக்கிலங்கை முஸ்லிம் தலைவர்கள் தங்களுடைய பாராளுமன்றப் பதவியைத் தக்கவைத்துத் தம்மையும் தம்மைச் சுற்றி இருக்கிறவர்களையும் வளப்படுத்துகிற விதமாக அரசியல் நடத்தினார்கள். இந்த அரசியல் உதிரித்தனத்திற்கான தேவை முஸ்லிம்கள் தேர்தல் தொகுதி அரசியலில் ஏகப் பெரும்பான்மையாய் அமைந்த பிரதேசம் ஒன்று இல்லாததாலேயே ஏற்பட்டது. மாவட்ட அடிப்படையிலான தேர்தல் முறையின் கீழே இந்த நிலைமை மாறியது. அதனாலேயே முஸ்லிம் சமூகத்தின் நலன்களை மட்டுமே வற்புறுத்துகிற ஒரு அரசியற் கட்சி உண்டாக வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ் முஸ்லிம் முரண்பாட்டைப் பகை முரண்பாடாக்குவது முஸ்லிம் அரசியல்வாதிகட்கு வசதியாகியது. வாயால் முஸ்லிம்களின் உரிமை பற்றி முழங்கினாலும் அஷ்ர.்.ப் தலைமையில் உருவான முஸ்லிம் காங்கிரசின் அரசியல் ஆட்சியாளர்களோடு பேரம் பேசுவது பற்றியதாகவே இருந்தது. பேரங்கள் முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளை விட முக்கியமாக அமைச்சர் பதவிகளைப் பற்றியதாகவே இருந்து வந்தன.

தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு போரை நோக்கி நகரத் தொடங்கிய பின்பு, உண்மையில் 1970 அளவிலேயே துரோகி என்ற அடையாளப்படுத்தல் இல்லாத ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர் பதவி ஏற்பது முடியாமல் போய்விட்டது. அவ்வாறு அமைச்சரானவர்களில் எவருமே தமிழ்ச் சமூகத்தின் நன்மையைச் சுட்டித் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தன்னுடைய பாராளுமன்ற ஆசனங்களைக் காட்டி அமைச்சர் பதவி பெற்றதால் முஸ்லிம் சமூகம், எவ்வளவு நன்மை பெற்றது என்பது விவாதத்திற்குரியது. உதாரணமாக, அஷ்ர.்.ப் இடம்பெயர்ந்தோரின் நிவாரணத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த போது, தனது நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதியைத் தன்னுடைய வாக்கு வங்கி என்று சொல்லக்கூடிய அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் செலவழித்தார். தமிழ் மக்கள் கிடைக்க வேண்டிய நிவாரணம் கிடைக்கவில்லை என்ற கசப்புணர்வுடன் இருந்தார்கள். ஆனாலும் வன்னிப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்களும் நன்மையடை யவில்லை என்பதைத் தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. இப்படிப்பட்ட நடத்தை, அதற்கு முன்னமே தமிழ் விடுதலை இயக்கங்களது அடாவடித் தனங்களால் கசந்து போயிருந்த முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான முரண்பாடுகளை மேலும் பகைமையான வையாக்கின. அஷ்ர.்.ப்பின் முஸ்லிம் காங்கிரசிற்கோ இந்த முரண்பாட்டைத் தீர்ப்பது முக்கியமானதாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசியவாதிகளும் முஸ்லிம்களை விலக்கியே தங்களுடைய அரசியலையும் போராட்டத்தையும் முன்னெடுத்தார்கள்.

அஷ்ர.்.ப்பின் அரசியல் இலக்குகள் பலமான தேர்தல் ஆதரவுத் தளம், அதிகப்படியான பாராளுமன்ற ஆசனங்கள், தனக்கும் தனக்கு நெருக்கமானவர்களுக்கும் கூடியளவு அமைச்சர் பதவிகள் என்பதற்கு மேலே போனதாகச் சொல்ல முடியாது. வேறு இலக்குகள் இருந்தன. அவை எல்லாம் பதவிகள் மூலமான பலவேறு வாய்ப்புக்கள் பற்றிய இலக்குகள் ஒழிய அரசியல் இலக்குகளல்ல. கிழக்கு மாகாணம் என்கிற அரசியல் குளத்திலிருந்து பிடிக்கக் கூடிய பாராளுமன்ற நாற்காலிகளை வைத்துக் கொண்டு எத்தனை மந்திரிப் பதவிகளை பெற முடியும்? ஆகவே வேறு குளங்களிலும் வலை வீச வேண்டி வந்தது. கண்டி, புத்தளம், களுத்துறை மாவட்டங்களிலும் கொழும்பிலும் உள்ள முஸ்லிம் வாக்குக்களுக்கு குறி வைத்துத் தேர்தலில் இறங்கிய பின்னால், முஸ்லிம் காங்கிரஸ் வலம் போனாலென்ன இடம் போனாலென்ன என்று அதுவரைக்கும் சும்மா இருந்த தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் முதலுக்கே மோசம் வரப் போகிறது என்று எச்சரிக்கையானார்கள். அதனால், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் அல்லது யூ.என்.பியுடன் கூட்டுச் சேராமல் தேர்தலில் போட்டியிடுவது ஒரு அரசியல் தேவையாகியது. முஸ்லிம் இனத்தின் நன்மைகளைப் பேசி அரசியல் நடத்திய அஷ்ர.்.ப் முஸ்லிம் காங்கிரசைக் கலைக்காமலே நுஆ எனப்படுகிற தேசிய ஒற்றுமைக் கூட்டணியை உருவாக்கி இரண்டு வள்ளங்களில் கால்வைத்துப் பார்த்தார். ஆனால் ''நுஆ வேறு முஸ்லிம் காங்கிரஸ் வேறு" என்ற எண்ணத்தை உண்டாக்க முடியவில்லை.

அஷ்ர.்.பின் முஸ்லிம் தேசிய இன அரசியலில் நம்பகத் தன்மை சரியத் தொடங்கிய சூழ்நிலையில் அவர் தன்னைப் பற்றிய கடுமையான முஸ்லிம் விமர்சகர்கள் சிலரை விலைக்கு வாங்கினார். ஆனாலும் அவருடைய அரசியல் தளம் அவர் எதிர்பார்த்த மாதிரி விரியவில்லை. பொது ஜன முன்னணி அரசாங்கத்தில் அவர் அமைச்சராக இருந்த காலத்திலே, அவருக்கும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவுக்கு முரண்பாடுகள் முற்றத் தொடங்கின பின்னணியில் இவரது எதிர்பாராத மரணம் நிகழ்ந்தது. இன்று வரை அவரது மரண மரமம் துலக்கப்படவில்லை.

அவரது மரணத்தை அடுத்து முஸ்லிம் காங்கிரஸில் ஏற்பட்ட விரிசல் போதிய அரசியல் தகுதியில்லாமல் அவரது இடத்தைப் பிடிக்கப் போட்டி போட்ட இருவருடைய போட்டியாக தொடங்கி முடிவில் பதவிக்காக கட்சி தாவும் அற்பத்தனமான கோஷ்டி அரசியலாகச் சீரழிந்து கிடக்கிறது.

2004 டிசம்பர் சுனாமியின் பின்பு தங்களுடைய தேர்தல் தொகுதிகளில் தலை நீட்டக்கூட முடியாத அளவுக்கு முஸ்லிம் காங்கிரசின் வாரிசுகள் மக்களுடைய கோபத்தைச் சம்பாதித்திருக்கிறார்கள் என்றால், அதற்கு அவர்களை மட்டும் பிழை சொல்லக் கூடாது. முஸ்லிம் காங்கிரஸ் தமிழரசுக் கட்சியை விட மோசமாகச் சீரழிந்து போன ஒரு தேசியவாத அமைப்பு.இன்று அது முஸ்லிம்களை தமிழ் மக்களிடமிருந்து பிரித்து வைக்கிறதன் மூலம் தன்னுடைய அரசியல் பிழைப்பை நடத்துகிறது. ஆனால் கிழக்கின் முஸ்லிம்கள் தங்களுடைய தேசிய இன உரிமைக்காகவும் சுயநிர்ணயத்துக்காகவும் ஒன்றுபட்டுப் போராட முடியாத அரசியல் அநாதைகளாக இருக்கிறார்கள் என்றால், காரணங்களை முஸ்லிம் காங்கிரசின் சந்தர்ப்பத்தை அரசியல் வரலாற்றின் பக்கங்களில்தான் தேட முடியும்.

முஸ்லிம் காங்கிரசின் பிறப்புக்கு ஒரு வரலாறு நிர்ப்பந்தம் இருந்தது. அதைப் பிறப்பித்த அளவுக்கு அஷ்ர.்.புக்கு அரசியல் முக்கியத்துவம் உண்டு. முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியல் நியாயத்தை இழந்து சீரழிந்து விட்டது. அந்தச் சீரழிவிற்கு அஷ்ரப் பூரண பொறுப்பாளியில்லை. ஆனால் அதில் அவருக்கு முக்கியமான பங்கு உண்டு.

முஸ்லிம் காங்கிரசினை அரசியல் வரலாற்று நோக்கில் விமர்சித்துப் பெறக் கூடிய பாடங்கள் முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கும் தேசிய இன விடுதலைக்கும் சுயநிர்ணயத்துக்கும் வழிகாட்ட முடியும். எங்கள் முஸ்லிம் புத்திஜீவிகள் எனப்படுவோர் தைரியமாக முன்வருவார்களா?

**எம்.ஏ.லத்தீ.்.ப்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



## தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் மீசையில் மண் ஒட்டவில்லையாம்

மரம் ஏறி விழுந்தவரை மாடு மிதித்த கதை போல கடந்த சில மாதங்களாக இலங்கை தமிழ் மக்கள் சொல்ல முடியாத அளவிற்கு அவலங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தமிழ்த் தேசியவாதிகள் பெரிதாக மதிக்கும் சர்வதேச சமூகமோ தமிழ் மக்கள் படும் அவலங்கள் பற்றி 'செவிடன் காதில் ஊதிய சங்கு' என்ற பழமொழிக்கு ஆதாரமாகும் வகையில் செயற்படுகிறது. இந்திய ஆளும் வர்க்கத்தினரோ வஞ்சகமாகவே நடந்து கொள்கின்றனர். இலங்கையின் தற்போதைய சூழ்நிலை பற்றி விளக்கமளிப்பதற்காக இந்தியாவுக்குச் சென்றிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சந்திக்கவில்லை.

மன்மோகன் சிங் சந்திக்காததற்கு கட்டணங்களைத் தெரிவிக்க திராணியற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர் 'கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்று கூறுகின்றனர். தங்களைச் சந்திக்காவிட்டாலும் தங்களை இந்தியா நிராகரிக்கவில்லை என்றும் கூறுகின்றனர்.

அதற்கு சப்பை கட்டுவதைப் போல் தமிழ் ஊடகவியலாளர்களும் எழுதி வருகின்றனர். தமிழ் மக்களுக்கு உடினடியாக வாக்குறுதியை கொடுக்கும் நிலையில் இந்தியா இல்லாதபடியலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பினரை இந்தியா பிரதமர் சந்திக்கவில்லையாம். அப்படி சந்திப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்தியா இருப்பதாக காட்டிவிடும் என்பதாலேயே சந்திக்கவில்லையாம்.

வட்டுக்கோட்டை தனிநாட்டு கோரிக்கையை தீர்மானமாக நிறைவேற்றியது முதல் பழைமைவாத தமிழ் தேசியவாதிகள் இன்னும் தமிழ் மக்கள் காதில் மிகவும் வசதியாகவே பூ வைத்து வருகிறார்கள். இன்னும் எத்தனை காலத்திற்கு தமிழ் மக்கள் காதில் பூ வைப்பார்களோ.

தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு சரியான அரசியல் முடிவுகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுப்பதில்லை. அவ்வாறு எடுத்திருந்தால் இன்றைய அவலநிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிராது குறிப்பாக மேற்கு நாடுகளையும் இந்தியாவை நம்பி போராடுவது போல் பாசாங்கு செய்வது அவர்களுடைய மிகவும் தவறான அடிப்படை ஆகும்.

பாலஸ்தீனத்துக்கு பதிலாக இஸ்ரேலிய சியோனிசத்தையே தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதர்சகமாக கொள்ள வேண்டும் என்பது அவர்களின் அரசியல் குருட்டுத்தனத்திற்கு மேலும் நல்ல சான்றாகும்.

இலங்கையின் இன்றைய அவல நிலைமைக்கு இந்தியாவும் பொறுப்பேற்க வேண்டும். அதனால் அவலப்படும் தமிழ் மக்களின் துன்பங்களை கேட்கவே தயாரில்லாத இந்தியாவை வெளிப்படையாக விமர்சிக்கும் நேர்மை இருப்பது அவசியம்.

எந்த வெளிச்சக்தியையும் நம்பி தமிழ் மக்கள் போராட முடியாது என்பதும் உணரப்பட வேண்டும்.

## இரண்டு மாத யுத்தத்தில் இரண்டு லட்சத்து ஒன்பதாயிரம் பேர் அகதிகள்

கடந்த இரண்டு மாத யுத்தத்தினால் வடக்கு கிழக்கில் இரண்டு லட்சத்து ஒன்பதாயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். உத்தியோகபூர்வ எண்ணிக்கையின்படி யாழ் குடா நாட்டில் ஐம்பதாயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். நாற்பத்தாறாயிரம் பேர் கிளிநொச்சியிலும், பதினாறாயிரம் பேர் முல்லைத்தீவிலும் இடம்பெயர்ந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் அறுபதாயிரம் பேரும், திருகோணமலையில் முப்பத்தைந்தாயிரம் பேரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை செய்ய சர்வதேச செஞ்சிலுவை சங்கமும், ஐக்கிய நாடுகள் நிறுவனங்களும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து அந் நிறுவனங்கள் அதிருப்தியை தெரிவித்துள்ளன.

எழுபது நாடுகளின் அங்கத்துவத்தை கொண்ட யூ.என்.எச்.சீ.ஆர் ன்ற அகதிகளுக்காக ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஒக்ரோபர் 2ஆம் திகதி ஜெனிவாவில் கூடியவேளை இலங்கையின் நிலைமை பற்றியும் ஆராய்ந்துள்ளது. அரசாங்கத்தின் அறிவித்தல்கள் அனுமதிகளுக்காக காத்திராமல் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான மனிதாபிமான பணிகளை முன்னெடுப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எப்படி செய்யப் போகின்றது என்பதைப் பார்ப்போம்!

## கல் நாட்டும் போட்டி! பங்கு பெறுவோர் எம்.பிக்கள்!

கொழும்பு மாவட்டத்தின் இரண்டு தமிழ் எம்.பிக்கள் பாடசாலை நிகழ்ச்சிகளுக்குத் தங்களையே அழைத்துக் கௌரவிக்க வேண்டுமென்று அதிபர்களை வற்புறுத்தி வருகிறார்களாம்.

ஒரு பாடசாலையின் அதிபர் தனது சொந்தச் செல்வாக்கைப் பிரயோகித்து பாடசாலை அபிவிருத்திக்கு நிதி பெற்றுக் கொண்டுள்ளார். இது மனோகரமானவருக்குப் பிடிக்கவில்லை. தன் மூலமாக அந்த நிதியைப் பெற்றிருக்கலாமே என்று அந்த அதிபரைக் கடிந்துள்ளார்.

மிக அண்மையில் ஒரு பாடசாலையில் ஒரு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு வைபவம் இடம்பெற்றது. அந்த இரண்டு எம்.பிக்களும் தாங்களே அடிக்கல் நாட்ட வேண்டுமென்று போட்டி போட்டனர். அதிபர் இது தொடர்பாக கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையைக் கேட்டுள்ளார். அவர் அடிக்கல்லை கல்லூரி அதிபரே நாட்ட வேண்டும் என்றும் அரசியல்வாதிகள் அல்ல என்றும் கூறியுள்ளார். அதன்படி அதிபர் அடிக்கல்லை நாட்டியுள்ளார்.

### வடக்கு கிழக்கைப்.......

7ம் பக்கத் தொடர்ச்சி

இதனால் கிழக்கு மாகாணத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் இணைப்பை விரும்பமாட்டார்கள் என்று பேரினவாதிகள் நம்புகின்றனர்.

அதனால் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இப்போதே பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தி வடக்கு கிழக்கு இணைப்பை பிரிக்க ஜனாதிபதியும் அவருடன் அணிசேர்ந்துள்ளவர்களும் எண்ணம் கொண்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம். ஐக்கிய இலங்கைக்குள்ளான சுயாட்சி கூட அந்த புவியியல் ரீதியான நிலத்தொடர்ச்சியை அடிப்படையாக கொண்டு ஏற்படுத்தப்பட்டாலன்றி தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் உறுதிசெய்ய முடியாது.

கிழக்கு மாகாணத்திலேயே பேரினவாத குடியேற்றங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. அம்மாகாணம் தனியாக இயங்கினால் பேரினவாத அடக்குமுறைகள் மேலோங்கி அங்கு வாழும் தமிழ், முஸ்லீம் மக்கள் அரசியல் சமூகரீதியாக பாதுகாப்பற்றவர்களாகி விடுவார்கள். கிழக்குமாகாணம் தமிழ்மக்களின் அடிப்படை தேவைக்கான உற்பத்தி நிலமாகும். அது தமிழ் தேசிய இனத்திற்கான பொருளாதார அடிப்படையை கொண்டுள்ளது. அதனை தமிழ் மக்கள் இழக்க இயலாது. கிழக்கு பிரிக்கப்பட்டால் தமிழ்-முஸ்லீம் மக்களிடையேயான பிரிவினை மேலும் அதிகரிக்கும் இதனால் பேரினவாதம் மேலும் பலமடையும்.

வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பதன் மூலம் அடக்கப்படும் தேசிய இனங்களான தமிழ், முஸ்லீம்களின் பலமான சுயாட்சியை ஏற்படுத்தி பேரினவாதத்தை தொடர்ந்து கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் வெற்றி என்பது சுயாட்சிமட்டுமல்ல பேரினவாதத்தின் விஷப்பல்லும் பிடுங்கப்படுவதாகும். வடக்கும் கிழக்கும் இணைந்த பலமான சுயாட்சியின் மூலமே அப்பல்லை பிடுங்க முடியும். வடக்கு கிழக்கு இணைந்திருக்கக் கூடாது என்ற பேரினவாத விருப்பம் நிறைவேறினால் தேசிய இனவிடுதலைப் போராட்டம் வெற்றியடைந்ததாக கொள்ள முடியாது.

அத்துடன் வடக்கும் கிழக்கும் இணைந்திருக்கும் மொழிவாரியான தமிழ் மாநிலத்தில் முஸ்லீம்களினதும், சிங்களவர்களினதும் (இவர்களும் பெரிய எண்ணிக்கையில் கிழக்கிலேயே வாழ்கிறார்கள்) சுயாட்சியை உறுதிசெய்யும் ஏற்பாடுகள் செய்யப்படுமிடத்து வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களினது சுயாட்சியை உறுதிசெய்யவும் நடவடிக்கைகளை எடுக்க நேரிடும்.

எனவே வடக்கு கிழக்கு இணைப்பை பிரிக்க மேற்கொள்ளப்படும் சதியை முறியடிக்க அடக்கப்படும் அனைத்து தேசிய இனங்களும் பேரினவாதத்தை எதிர்க்கும் சகலரும் ஐக்கியப்பட வேண்டும். பொதுசன அபிப்பிரயா வாக்கெடுப்பு நடத்தப்படுமானாலும் கிழக்கு மக்கள் அனைவரும் இணைப்பிற்கு ஆதரவாகவே இருக்க வேண்டியது அவசியம். இதில் கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் பொது உடன்பாடு ஏற்பட வேண்டும்.

## வரலாற்றை விடுதலை. செய்யான்



மனித குலத்தை ஆள-ராட்சச
பிணிகள் துணியலாமோ!
துணிந்த சனிகள் மனிதர்
குருதி பருகலாமோ! பருகிடும் போதில்
பணிதல் என்பதிங்கு
குனிதல் குனிதலன்றோ.........!

வியர்வையாளன் ரத்தம் - வீணே
விரையலாகுமோ!
நரகர் 'மனிதர்' உருவில் - அற
அரசை ஆளலாமோ! ஆண்டனர்.....
தர்மம் நசிந்தது; உண்மை பொய்த்தது......
பொறுமை பொறுமை நீங்கி
பூலோகத்தின் மூலை அதிர்ந்தது
ஆகா! பிறந்தான் பிடல்!

உழைப்பவன் வயிற்றுக்கு
பத்தியம் சொன்ன - ஏகாதி
பத்தியனை இடித்தான் - அவர்
வயிற்றில் புளி கரைத்தான்
கரும்புகள்; கரும்பாளர் குருதி பருகிய
பெரும் எறும்புகளை நசித்தான்.
செக்கச் சிவந்தது கிழக்கு
சூரியன் தீர்த்தான் இருளின் வழக்கு
நசிந்தவன் நசிந்தான்
பசித்தவன் புசித்தான்
ஏழை சிரித்தான்.

அன்பருக்கு அன்பராய்
யாவையுமாய் அல்லையுமாய்
வம்பருக்கு வம்பராய்
வானகமே எல்லையுமாய் ஆனவனை
இம்பர் உலகு எவர் - அது என்றே
வியந்து; நிமிர்ந்தது - கம்பீரம்;
விஸ்ணு நிமிர்ந்து வியந்த
விஸ்வ ரூபன் அவன்.

ஐம்பதாண்டு தோழமையாட்சி
ஆட்சி எங்கணும் வியர்வையின் மாட்சி!

இன்றொரு மாலைச் செய்தியில்
நலங் கெட்டார் பிடல் எனும்
நலங் கெட்ட சேதி கேட்டேன் - பிடல்
நலங் குன்றும் உடல் கொண்டோன் - என்ற
உளங் கொள்ளான் நான்.

கண்ணில் நீர் வராது நானும்
என்னில் நிறைந்தழுது; மனந்துடித்து
பெரும் புண்ணை நெஞ்சமதில் ஏந்தி
திண்ணமிழந்தேன்; துடித்தேன்.

கவலையொன்றின் கனத்தை
தவளை யொன்று தலைமேல் - பெருங்
கல்லை சுமந்த வலியை உயிரின்
எல்லை வரையும் சுமந்தேன்

உலகின் நோயைத் தீர்க்க
உறுதி பூண்ட பெரியோன்- தன்
உடலின் நோயைக் கண்டு
உறுதி வற்றுவானோ!
திடுமென பொழியும் மழையைப் போலே
திடமுடன் வென்றே மீள்வான்
மீண்டவன் மீண்டும் ஆள்வான்.

எண்பது வயது இளஞ்சிங்கமே!
அறுபதுகளின் கம்பீரத்தோடு
எழுந்து வாருங்கள் - இன்னும்
இருபது வருடங்களில் மீட்பர் ஒருவரின்
நூறாவது பிறந்த தினத்தை
உங்களோடு கொண்டாட
உலகம் கொண்ட ஏக்கம்
தீருங்கள்; தீர்ப்பீர்கள்....!
பிறந்த நாள் வாழ்த்துக்கள்

**வே.தினகரன் - பத்தனையூர்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# விவசாயிகளின் எழுச்சியைக் கண்டு இந்தியா முழிக்கிறது!

இந்தியாவில் 13 மாநிலங்களில் மாவோவாதிகளின் தலைமையிலான ஆயுதப் போராட்டம் நடைபெறுகிறது. மிகுதி 16 மாநிலங்களுக்கும் அது பரவுவதைத் தடுக்க இந்திய மத்திய அரசு திட்டம் தீட்டு முகமாக ஒரு நாள் மாநாடு ஒன்றை இந்தியாவின் உள்நாட்டு அமைச்சின் செயலர் வீ.கே.டக்கால் சென்ற மாதம் கூட்டியிருந்தார்.

மத்திய மாநிலமான சண்ட்டிஷ்கார் மாநிலமே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அம் மாநிலத்தின் 16 மாவட்டங்கள் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. அம் மாநிலத்தில் 2005ஆம் ஆண்டில் 130 பேர் கொல்லப்பட்டனர். 2006 முதல் ஏழு மாதங்களுக்குள் 272 பேர் கொல்லப்பட்டனர்.

ஆந்திரா, பீகார், ஜார்கன்ட், ஒரிசா போன்ற மாநிலங்களில் உள்ள போராளிகளுக்கும் நேபாளத்து மாவோவாதிகளே உதவி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமரின் கூற்றுப்படி இந்தியா எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக இந்தப் போராட்டங்கள் கருதப்படுகின்றன.

இந்த ஒரு நாள் மாநாட்டின் முடிவில் பஞ்சாப் மாநிலத்தில் அடக்கு முறையைக் கையாண்ட நிபுணர் எனக் கூறப்படும் கவார் பால்சிங் ஹில் என்பவரை நியமித்து மாவோ போராளிகளை அடக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்பில் அடக்குமுறைகளை கட்டவிழ்த்த அவரால் மாவோ போராளிகளின் போராட்டத்தை அடக்க முடியுமா?

## இந்தியாவில் விநோதம்! அதிகரிக்கும் விவசாயிகளின் தற்கொலைகள் சம்பள உயர்வு பெறுகின்றனர் எம்.பிக்கள்!

இந்தியா திறந்த பொருளாதாரத் திட்டங்களை மேற் கொள்வதனால் அந் நாட்டின் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். கடன் சுமை தாங்காமல் அவர்கள் தற்கொலை செய்கின்றனர்.

இந்திய மாநிலமான மகராஷ்டிராவில் ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் 100 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். சராசரி தினமொன்றிற்கு மூன்று பேர் தற்கொலை செய்கின்றனர். ஆகஸ்ட் மாதத்தில் அந்த மாநிலத்தில் 900 பேர் இவ்வாறு வாழ்க்கையை முடித்துக் கொண்டனர்.

கடந்த 5 வருடங்களில் ஆந்திரா, கர்நாடகம், கேரளா மாநிலங்களில் 3600 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

தற்கொலைகள் அதிகரிப்பதால் யூலை மாதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் மகராஷ்டிரா மாநிலத்திற்கு விஜயம் மேற்கொண்டு நிவாரணத்திட்டமொன்றை முன்வைத்திருந்தார். அவர் அறிவித்த நிவாரணத் திட்டத்தின் பின்பு அம்மாநிலத்தில் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இது பற்றி பிரதமரிடம் அபிப்பிராயம் கேட்ட போது தனது திட்டத்தின் பலாபலன்களை இரண்டு மூன்று மாதங்களில் எதிர்பார்க்க முடியுமென அவர் கூறினார்.

அதேவேளை, இந்திய எம்.பிக்களின் சம்பளம் 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 8000 ரூபாவாக இருந்த சம்பளம் 12,000 ரூபாவாகியுள்ளது. 545 அங்கத்தவர்களும் எதுவித வேறுபட்ட கருத்துமின்றி சம்பள அதிகரிப்புக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஐந்து வருடங்களின் பின் மீண்டும் சம்பள அதிகரிப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

எம்.பிக்களின் பிற வசதிகளும் முன்னாள் எம்.பிக்கள் அவர்களது உறவினர்களுக்கும் பின்நோக்கி இந்த அதிகரிப்புக் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய எம்.பிக்களுக்கு அவர்களின் சம்பளத்தை விட பல சலுகைகள் உண்டு. றெயில், விமான போக்குவரத்து இலவசம். ரெலிபோன் வசதியுடன் ஊழியர்களுக்கான சம்பளமும் அரசினாலேயே கொடுக்கப்படுகிறது. புதுடில்லியில் அவர்களுக்கு வீட்டு வசதிகளும் உண்டு. இதைவிட வேறு அலவன்சும் எம்.பிக்களுக்கு வழங்கப்படுகிறது. இவையாவும் சட்ட ரீதியான கொடுப்பனவுகள்.

''கிம்பளம்'' பற்றிச் சொல்லவா வேண்டும்?

## இந்தியாவுக்கு நெல் ஏற்றுமதி! இலங்கைக்கு வீறாப்பு!


அண்மையில் இந்தியாவுக்கு இலங்கை நெல்லை ஏற்றுமதி செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது நாடு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விட்டது போல் பொதுமக்களுக்கு ஒரு பிரச்சார நடிவடிக்கையே. நமது நாட்டின் சனத்தொகையில் கால்வாசிப்பேர் போசாக்கின்மையால் வாடும் போது நெல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஒரு புசல் நெல்லை ரூபா 16.50க்கு கொள்வனவு செய்து அதைக் கிட்டத்தட்ட அரைவாசி விலைக்கு இந்தியாவுக்கு அனுப்பியுள்ளனர்.

மேலதிக நெல்லை சேமித்து வைக்க அரசினால் முடியவில்லை. அப்படியானால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள நாட்டு மக்களுக்கு மேலதிகமாக அதாவது சேமித்து வைக்க முடியாதிருக்கும் நெல்லை மானிய அடிப்படையில் கொடுத்திருந்தால் நமது மக்கள் ஒரு வேளையாவது வயிறார உண்டிருப்பார்கள்.

இந்த வருட அறுவடை நன்றாக இருந்ததால் எதிர்காலத்தில் நன்றாகவே அறுவடை இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. வரட்சி, வெள்ளம் என்பதை அவ்வப்போது எமது நாடு சந்தித்து வருகிறது. எனவே மேலதிகமாயிருந்த நெல்லை சேமித்து வைப்பதற்குப் பதிலாக ஏற்றுமதி செய்வதென்பது ஒரு தேசத்துரோகச் செயலாகும்.

இந்தியாவுக்கு இலங்கையின் நெல் தேவைப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் இந்தியாவில் நெல் உற்பத்திச் செலவு மிகவும் குறைவு. இலங்கை அரசின் வேண்டுகோளிற்கு இணங்க நெல்லை இந்தியா வாங்கியமை ஒரு அரசியல் நடவடிக்கை என்பதும் கவனிக்கத்தக்கது.

# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## சர்வதேச மன்னிப்புச் சபையும் மனித உரிமையும்

உலகில் நடைபெறும் மனித உரிமை மீறல்களையும் அதுசார் செயற்பாடுகளையும் அறிக்கைப்படுத்தும் சுயாதீன அமைப்பாக சர்வதேச மன்னிப்புச்சபை (Amnesty international) புகழ்பெற்றது. இதனது லெபனான் மீதான 34 நாள் போர் பற்றிய இறுதி அறிக்கையில் 43 இஸ்ரேலியர்களை கொலை செய்ததுடன், 33 இஸ்ரேலியர்களை காயப்படுத்தியதும் மன்னிக்க முடியாத போர்க் குற்றங்களாக தெரிவிக்கப்பட்டுள்ளன. இதனால் தனது அறிக்கையில் ஹிஸ்புல்லா அமைப்பை கண்டித்திருந்தது அம்னெஸ்டி இன்டர்நசனல். ஆனால் 1000 ற்கும் மேற்பட்ட அப்பாவி லெபனான் மக்களை கொன்றுகுவித்த இஸ்ரேலின் மீது பாரிய கண்டனமோ குற்றமோ கூறப்படவேயில்லை. அப்படியென்றால் அவர்களது அறிக்கையின்படி இஸ்ரேல் போர்க் குற்றவாளி கிடையாது. அப்படித்தானாம்... ஏனென்றால் மீறுவது யார் என்பதும் மீறப்படுவது எவரது உரிமைகள் என்பதுமே மீறப்பட்டது மனித உரிமைகளா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்றன.

## இதுவன்றோ மனிதாபிமான உதவி

சும்மா இருந்த ஆப்கானிஸ்தானை குண்டுவீசி தரைமட்டமாக்கிவிட்டு இப்போது அங்கே மனிதாபிமான உதவிகளை(?) செய்கிறது அமெரிக்கா. 80% ஆப்கானிஸ்தானியருக்கு குடிப்பதற்கு சுத்தமான குடிநீர் கிடையாது. இந்தப் பிரச்சினைக்கு சர்வதேச தீர்வை முன்வைப்பதற்காக சொல்லி ஒரு அருமையான செயலை செய்து முடித்திருக்கிறார்கள், சத்தமில்லாமல். செப்ரெம்பர் 10 ஆம் திகதி 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் கொக்கோகோலோ உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி முகமட் கர்சாய் திறந்து வைத்தார். 'குடிக்க சுத்தமான தண்ணீர் இல்லாவிட்டால் என்ன அவர்கள் கோக் குடிக்கட்டும்!' என்கிறார்கள். குடிக்க நல்ல தண்ணீரே இல்லாத நாட்டில் கோக் உற்பத்தி செய்ய நல்ல தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது என்றுதான் விளங்கவில்லை.

## பேச்சும் போர்க் குற்றமும்

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் 5ஆவது ஆண்டு நிறைவையொட்டி பேசிய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ''இந்த யுத்தமாவது எதிரிகளுக்கு எதிரான இராணுவ யுத்தம் மட்டுமல்ல. இது ஒரு கோட்பாடு யுத்தமும்கூட. இஸ்லாமும் இஸ்லாமிய தீவிரவாதமும் எமது முதல் எதிரிகள். அதை முற்றாக ஒழிக்க சகல அமெரிக்கர்களும் பாடுபட வேண்டும்'' என்று சொன்னார். 1948ஆம் ஆண்டின் இனப்படுகொலைக்கு எதிராகவும் அதை தடுப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட பட்டயம் இவ்வாறு சொல்கின்றது. ''இனப்படுகொலைகளைச் செய்பவர்கள் மட்டுமல்ல இனப்படுகொலைகளை தூண்டுபவர்களும் கூட குற்றவாளியாகக் கருதப்படுவர்'' அப்படியென்றால் இவ்வாறு பேசியதற்காக புஷ் குற்றவாளியாகக் கருதப்பட வேண்டும் அல்லவா?
''புஷ் குற்றவாளியா; யார் சொன்னது?'' என்றவொரு குரல் கேட்கிறது. அநேகமாக அது ஒரு அமெரிக்க அடிவருடியினது குரலாகத்தான் இருக்கும்.

## பில்கேட்சும் பசுமைப் புரட்சியும்

உலகின் முதன்மையான பணக்காரரான பில்கேட்ஸ் ஆபிரிக்காவில் வறுமையைப் போக்குவதற்கு பல இலட்சங்களை கொடுத்திருக்கின்றார். அவரது பணமானது பசுமைப் புரட்சியின் ஊடாக மக்களின் வறுமையைப் போக்கப்போவதாக சொல்லிக்கொள்கிறது. அமெரிக்க பல்தேசியக் கம்பனிகள் இதை வெற்றிகரமாக செய்து முடிக்கும் என்றும் இன்னும் 10 ஆண்டுகளில் ஆபிரிக்காவில் வறுமை இருக்காது என்றும் கதை விடுகிறார்கள். இதெல்லாம் மக்கள் சேவையுமல்ல, மகேசன் சேவையுமல்ல. ஒரு மிகப் பெரிய முதலாளி சின்ன முதலாளிக்கு மக்களுக்கு என்ற பெயரிலும் பசுமைப் புரட்சி என்ற பெயரிலும் கொடுத்த பண உதவியே. ஏகாதிபத்திய பெரு முதலாளித்துவத்திற்கு மக்களாவது.. மண்ணாவது.. நல்ல கண்கட்டி வித்தை.

## மெக்சிக்கோவின் மக்கள் தலைவன்

அண்மைய மெக்சிக்கோ ஜனாதிபதி தேர்வில் இடம்பெற்ற குழறுபடிகளை எதிர்த்து மக்கள் போராட்டங்கள் நடைபெற்றன. ஆனால் இறுதியில் தேர்தல் ஆணையகம் தேர்தல்கள் சரியானது எனத் தீர்ப்பளித்து அமெரிக்க ஆதரவு வேட்பாளரை ஜனாதிபதியாக்கியது. மெக்சிக்கோ மக்களின் ஏகோபித்த தலைவர் என்று புஷ் அமெரிக்க ஆதரவு வேட்பாளரை வர்ணித்தார். தனது வெற்றியை உறுதிப்படுத்த இவர் தேர்தல் ஆணையகத்துக்கு செல்ல வேண்டியிருந்தது. பலத்த மக்கள் போராட்டத்தின் விளைவால் அவர் ஹெலிகொப்டரில் இராணுவ பாதுகாப்புடனேயே தேர்தல் ஆணையகத்துக்குச் செல்ல முடிந்தது. புஷ் சொன்ன மக்கள் தலைவர் இவர்தான்!

## என்னவாம் முஸாரப்!

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்துக்கு உதவவில்லையென்றால் பாகிஸ்தானைத் தாக்குவதாக அமெரிக்கா சொன்னதாக சொன்ன முஸாரப் வெள்ளை மாளிகையில் புஷ்சை சந்திக்கிறார். பயங்கரவாதத்திற்கு தான் உதவுவதாக புஷ்சுக்கு வாக்குறுதியளிக்கிறார். இவரை மிகவும் துணிச்சலான தலைவர் என்று புஷ் புகழ்கிறார். அட, உண்மையில் என்னதான் நடக்கிறது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# ஆதிக்க கலை இலக்கிய வக்கிரங்கள்

-ஜெ.சற்குருநாதன்-

புதிய பூமியில் ஞானம் சஞ்சிகை பற்றி வெளியான கருத்துக்களுக்கு செம்ரெம்பர் மாத ஞானம் இதழில் வக்கிரங்களுடன் பதில் எழுதப்பட்டுள்ளது.

கருத்து நிலையில் ஞானம் ஒரு கருத்துமுதல்வாத சஞ்சிகை. புதியபூமி இயங்கியல் பொருள் முதல் வாதத்தை நோக்காக் கொண்ட பத்திரிகை. அதனால் கருத்து முதல்வாதத்திற்கும் பிற்போக்குவாதக் கருத்துக்களுக்கும் வரலாற்றுத் திரிபுகளுக்கும் புதியபூமி பதிலளிக்க வேண்டும். ஞானம் பற்றிய கருத்துக்களிலும் அதனையே காணமுடிந்தது.

ஞானத்துடன் அந்தனிஜீவா போன்ற தங்களைத் தாங்களாகவே இடதுசாரிகள் என்று கூறிக்கொள்பவர்கள் இணைந்திருக்கும் (பேராசிரியர் சிவத்தம்பி கம்பவாருதியுடன் சேர்ந்து இலக்கிய சேவை செய்வது போல) சாதி, சமய, பிரதேச வெறி கொண்டவர்கள் கூட்டாகச் செயற்படுவார்கள். நேர்மையான மாக்ஸிய லெனினிய வாதிகளை தாக்குவதற்கு கருத்து நிலை சார்பான விவாதங்களை எடுக்காது அக நிலையான சாதி, சமய, பிரதேச வக்கிரங்களை கட்டவிழ்த்துவிடுவார்கள். திரிபுகளை புனைவார்கள்.

புதிய- ஜனநாயக கட்சி, தேசிய கலை இலக்கியப் பேரவை போன்றவற்றை யாழ்ப்பான அமைப்புக்களென கூறி அந்தனிஜீவா தனது உயர்ரத்த அழுத்தத்தை மேலும் அதிகரித்துக் கொண்டு ஆவேசமாக பிரதேச வாத துவேசம் பேசும் அவர் ஞானசேகரனுக்கு கூட்டாளி! ஞானசேகரன்! அந்தனிஜீவாவிற்கு கூட்டாளி! அவர்களின் உறவுக்கு அடிப்படை என்ன! இடதுசாரியிசமா? இடதுசாரி எதிர்ப்பிலா பிழைப்புவாத இலக்கியமா? இவர்களிருவரும் ஒருவரின் அடிமுடியை இன்னொருவர் தேடாமல் பழகிக் கொள்வார்களா? புதிய பூமிக்கு எதிராக அவர்களின் கூட்டணி எத்தகையது?

மாக்சிச லெனினிய விரோதத்தை தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

ஞானசேகரன் மிகவும் வெளிப்படையானவர். அவரின் குருதிமலை நாவல் வரவேற்கத்தக்கது. அவரின் 'லயத்துச் சிறைகள்' சீரழிந்த மத்தியதர வர்க்க நிலைப்பாட்டின் வெளிப்பாடு. இவை தான் முற்போக்கல்லாதவன் இல்லை என்று காட்ட முயற்சிக்கும் ஞானசேகரனின் முரண்பாடுகளாகும். அவரின் படைப்புக்களில் காணப்படும் மனிதாபிமான நிலைப்பாடு ஆதிக்கவர்க்கத்திற்கு, ஆதிக்க அரசியலுக்கு, ஆதிக்க பண்பாட்டிற்கு வலு சேர்ப்பவை ஆகும் அல்லது ஆதிக்கப் பண்பாட்டை நியாயப்படுத்தி தடவிக் கொடுப்பதாகும்.

பேராசிரியர் கைலாசபதியை எதிர்ப்பவர்கள் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவரின் பங்களிப்பை மதிப்பவர்கள் தொடர்ந்து மதிக்கக் கூடாது என்பது அவரை எதிர்ப்பவர்களின் பிரகடனமும் யுத்தமுமாகும். பேராசிரியர் கைலாசபதியின் பங்களிப்பை மதிப்பவர்களை வாயடக்கச் செய்ய வேண்டும் என்று அவரை எதிர்பவர்கள் தொடர்ந்து முயற்சிக்கும்போது அவரை மதிப்பவர்கள் தொடர்ந்தும் அவர்களை நியாயப்படுத்தும் கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். இதற்கு காரணம் கைலாசபதி வணக்கத்திற்குரியவர் என்பதற்காகவல்ல. அவரின் கருத்துநிலை ஆகக் கூடுதலான எண்ணிக்கையான உழைக்கும் மக்களின் நீதிக்கானதாகும் என்பதினாலாகும்.

பேராசிரியர் கைலாசபதி சகல மாக்ஸிய மக்கள் இலக்கிய கோட்பாடுகளுக்கும் விடைகளை கொடுத்துவிட்டே காலமாகியிருக்க வேண்டும் என்பது அவரை ஆதரிப்பது போன்று எதிர்ப்பவர்கள் சிலர் கூறுகின்றனர்.

கைலாசபதியை சாதி ஆதிக்கம் உடையவர் என்று சிலர் காட்ட முயற்சித்துக் கொண்டே இருக்கின்றனர். ''நிலவிலே பேசுவோம்'' என்று ஓட்டை விழுந்த ரெக்காடை மீண்டும் மீண்டும் போட்டுக் காட்டத் தவறுவதில்லை.

அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் சமரசம் செய்து கொண்டு தமிழ் தேசியவாதத்திற்கு எதிராகச் செயற்பட்டார் என்பது இன்னும் சிலரின் பித்தலாட்டங்கள்.

அவர் மலையக எழுத்தாளர்களை மதிக்கவில்லை என்று இன்னும் சில மலையக எழுத்தாளர்கள் கூறுகின்றனர். சிலர் கைலாசபதியையும் சிவத்தம்பியையும் சம்பந்தப்படுத்தப் பார்க்கிறார்கள். சிலர் சிவத்தம்பியை மேலானவராகக்காட்ட முயற்சிக்கிறார்கள்.

கைலாசபதிக்கு யாரினுடைய முதுகையும் சொறிய வேண்டிய அவசியம் என்றும் இருந்ததில்லை. அரவது மாக்ஸிய அறிவின் வழிநின்று அவரால் பலரை ஏற்றுக் கொண்டிருக்க முடியாமலிருந்திருக்கலாம். சிலரை சாட வேண்டி இருந்திருக்கும். அந்த மாக்ஸிய அறிஞர் அவர் வழி நின்று செயற்படும் சுதந்திரத்தைக் கொண்டிருந்தார். அவர் இறந்து பல வருடங்களாகியும் அவரது அந்தச் சுதந்திரத்தைச் சாடுகிறவர்கள் தங்களை ஜனநாயகவாதிகள் என்கிறார்கள்.

எல்லாவற்றையும் விட தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாடுகள் பற்றி பேசாதிருப்பதுடன் இருட்டடிப்பு செய்பவர்கள்தான் கைலாசபதி தங்களை இருட்டடிப்பு செய்ததாகக் கூறுகின்றனர்.

புதிய பூமியும் அதன் வாசகர்களும் மாக்ஸிசத்தை நம்புகிறவர்கள். அவர்களின் அறிவிற்கு எட்டியவரை என்.எம்.பெரேரா, பீற்றர் கெனமன், பிலிப் குணவர்த்தன, விமல் வீரவன்ஸ போன்றோர் மாக்ஸியவாதிகள் அல்ல. அந்தனிஜீவாவுக்கு விமல்வீரவன்ஸ இடதுசாரி. ஞானசேகரனுக்குந் தான். ஏனெனில் இடதுசாரி, மாக்ஸிஸ விரோதத்தை முன்னெடுப்பதற்கு அதுவே வசதியானதாகும்.

எல்லாவற்றுக்கும் பணமே என்று வாழும் சில எழுத்தாளர்களும் சில தன்முனைப்பு மிக்க ஜாம்பவான்களும் அவர்களின் நிலைக்கு எல்லோரையும் தாழ்த்திப் பார்க்கும் பண்பைக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் பண்பை ஏற்கும் நிலையில் தேசிய கலை இலக்கியப் பேரவையோமக்கள் கலை இலக்கியவாதிகளோ இல்லை.

மாக்ஸிய விமர்சகர்களை வாய் மொழி வன்முறையாளர்கள் என்றோ எழுத்துப் பயங்கரவாதிகள் என்றோ கூறிக்கொண்டு மக்கள் கலை இலக்கிய வாதிகளின் கழுத்துக்களை நறுக்கவே கருத்துக்களை முறியடிப்பதற்கு முயற்சிக்கவோ அனுமதிக்க முடியாது. ■

## மலைபோல் உயர்ந்திடுவீர்

தொலைந்த முகவரிக்குள் வாடும்
தோட்டத்துப் பெண்களே!
தேயிலைக் கொழுந்தெடுக்கவே
தோன்றியதாய் தேங்கிக் கிடக்காதீர்!
துரைமார் மட்டுமன்றி
தொட்டணைக்கும் கணவனும்
தொல்லை கொடுத்து வதைத்தால்
விதியது தானென்று நினைத்து
வீழ்ச்சியிலே உழலாதீர்!

உழைக்கும் பெண்கள் நல்
ஊதியங்கள் பெறுவீர்
உம் குறை சொல்வீர்
உயர்விற்கு வழி காண்பீர்!

சர்வதேச மகளிர் எல்லாம்
சமவுரிமை கோரி நின்றார்.
சளைத்தவரா நீங்களிங்கு
சமத்துவத்தைப் பெறுவதற்கு.

மலையேறும் உம் வாழ்க்கை
மடுபோல தாழ்ந்ததென்ன?
மதியுரைக்கும் கல்வி தனையும்
மாண்புடனே கற்றிடுவீர்!

கல்வியறிவு கண் திறந்தால்
கற்றதனால் கிளர்ச்சி பெற்று
காலத்தை வென்றிடலாம் - உம்
காவியம் படைத்திடலாம்

வினைத்திறன் மிக்க நீங்கள்
விதியினையும் மாற்றிடலாம்
விழித்தெழுந்து
விண்ணையும் தொட்டிடலாம்!

சந்திரகாந்தா முருகானந்தன்-

## தோட்டத் தொழிலாளர்களை....

1ம் பக்கத் தொடர்ச்சி

குடியிருப்புகளிலிருந்து வெளியேற் றுதல் ஆரம்பத்தில் இடம்பெற வில்லை. 1972ஆம் ஆண்டிற்குப் பிறகு தோட்டங்கள் அரசுடமையாக் கப்பட்டன. இதனையடுத்து தோட்டக் குடியிருப்புகளிலிருந்து அதிகமானோர் பல்வேறு காரணங்களுக்காக வெளியேற்றப்பட்டனர். தோட்டத்தில் வேலை செய்யவில்லை என்பது ஒரு காரணமாகும்.

1991இல் தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டபிறகு தோட்டக் குடியிருப்புகளிலிருந்து தொழிலா ளர்களை வெளியேற்றும் பல நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மக்களின் எதிர்ப்பு காரணமாக அவ்வப்போது தோட்டத் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்று அரசாங்கம் வாக்குறுதி அளித்திருப்பதாக கூறுவதை தொழிற்சங்கத் தலைவர்கள் வழக்கமாக கொண்டுள்ளனர்.

தோட்டங்களில் வேலை செய்யாமல் தோட்டக் குடியிருப்புக்களில் வாழும் 35 ஆயிரம் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களை வெளியேற்றப் போவதாக தோட்டக் கம்பெனிகள், சில மாதங்களுக்கு முன்பு அறிவித்திருந்தன. அதற்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. அதனையடுத்து அவ்வாறு வெளியேற்றப்படமாட்டார்கள் என்று தொழிற்சங்கத் தலைவர்கள் வாக்குறுதியளித்தனர்.

ஒரேயடியாக பெரும் எண்ணிக்கையில் வெளியேற்றினால், காட்டப்படும் எதிர்ப்பை சமாளிக்க முடியாது என்பதால் அங்கொன்றும், இங்கொன்றுமாக வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சப்பிரகமுவ தென்மா கான தோட்டங்களிலேயே வெளியேற்றும் நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்விடங்களில் தொழிலாளர்களின் எதிர்ப்பு போராட்டங்களை இலகுவாகவே இனவாதப் போராட்டங்களோடு திரித்துக் காட்ட முடியும் என்பதுடன் தொடர்ந்தும் பேரினவாதிகளால் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதால் அவ்விடங்களிலிருந்து வெளியேறிவ ருவதும் வெளியேற்றும் நடவடிக்கை களுக்கு சாதகமாக இருந்து வருகின்றன.

200 வருடங்களிற்கு மேலாக தோட்டக் குடியிருப்புக்களில் வாழ்ந்து வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அக்குடியிருப்புக்கள் சொந்தமில்லை. அதைவிட அவர்களுக்கு வேறு இருப்பிடமோ, காணியோ கிடையாது. இந்நிலையில் தோட்டக் குடியிருப்பு க்களிலிருந்து வெளியேற் றப்படுபவர்களுக்கு போக்கிடம் இல்லை.

இலங்கையை கட்டிவளர்ப்பதில் பெருந்தோட்ட தொழிலின் மூலம் பாரிய பங்களிப்பை தோட்டத் தொழிலாளர்கள் செய்துள்ளனர். அவர்கள் பரம்பரை பரம்பரையாக தோட்டக் குடியிருப்புக்களில் வாழ்ந்து வருகின்றனர்.

தோட்டக் குடியிருப்புக்களில் குடியிருப்போருக்கு அவை சொந்தம் என்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்திலும், பொ.ஐ.ஐ.முன்னணி ஆட்சிக்காலத்தில் வீட்டுறுதி வழங்கும் விழாக்கள் பலமுறை நடத்தப்பட்டன. அவற்றுடன் தோட்டத் தொழிலாளர் களின் வீட்டுப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக தொழிற்சங்கங்கள் கூறின. ஆனால் தீர்ந்தபாடில்லை. மீண்டும் மீண்டும் தொழிலாளர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தோட்டக் குடியிருப்புக்கள் தமக்கே சொந்தமென குடியிருப்போர் அக்குடியிருப்புக்களில் பல திருத்த வேலைகளை அவர்களது சொந்த செலவில் செய்துள்ளனர்.

பழைய லயன் அறைகள், இரட்டை அறை குவார்ட்டஸ்களை தவிர பின்பு சில தோட்டங்களில் வீடு கட்டுவதற்கென 2-1/2 பேர்ச் காணி வழங்கப்பட்டது. அதன்பிறகு சில தோட்டங்களில் சில தொழிலாளர் களுக்கு 7 பேர்ச் காணி வழங்கப்பட்டது. பின்பு சிலருக்கு 10 பேர்ச் காணி வழங்கப்பட்டது. இக் காணிக்கு அதில் கட்டப்படும் வீடுகளுக்குரிய செலவுக்கென்று தோட்டத் தொழிலாளர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து குறிப்பிட்ட தொகை வழங்கப்படுகிறது. தோட்டத் தொழிலாளர்களின் சேமலாப நிதியை பிணையாக வைத்தே காணியையும் வீடு கட்டுவதற்குரிய பொருட்களையும் தோட்ட நிர்வாகங்கள் வழங்கின. சம்பளத்தில் கழிக்கப்பட்டும் மீளப் பெற்றுக் கொள்ள முடியாத தொகை அவர்களின் சேமலாப நிதியிலிருந்து கழித்துக் கொள்ளவும் ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆனால் இவ்வாறு வழங்கப்படும் காணிகளுக்கோ, வீடுகளுக்கோ உரிய உறுதிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இதைவிட சில தோட்டங்களில் சில தொழிலாள ர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட தொடர் மாடி வீடுகளுக்கும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் பணம் அறவிடப்படுகிறது.

இந் நடவடிக்கைகளும் கூட தோட்டக் குடியிருப்புக்கள் அவற்றில் குடியிருப்பவர்களுக்கே சொந்தம் என்ற நம்பிக்கையை வளர்த்துள்ளது. தோட்டத் தொழிலாளர் குடும்பமொன்றுக்கு வீடு கட்டுவதற்கென தோட்டக் காணியிலிருந்து 20 பேர்ச் வழங்கப்பட வேண்டுமென தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. அது நடைமுறைப்படுத்தப்படவே இல்லை.

ஆனால் அரச காணிகள் மீளப்பெறும் சட்டத்தையும், அரச குடியிருப்புக்களை மீளப்பெறும் சட்டத்தையும் கொண்டு தோட்டங்களில் ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர்களையும் அவர்களின் வழித் தோன்றல்களையும் தோட்டங்களில் வேலை செய்யவில்லை என்ற காரணத்தைக் காட்டி தோட்டக் குடியிருப்பு க்களிலிருந்து வெளியேற்றும் நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதைதவிர, இனரீதியான தாக்குதல்களினால் தொழிலாளர்கள் தோட்டங்களிலிருந்து வெளி யேற்றப்பட்டு வருகின்றனர்.

தோட்டக் குடியிருப்புக்களில் குடியிருப்போருக்கு சொந்தம் என்ற பொதுப்பிரகடனம் அவசியம். இது வெகுஜனப் போராட்டங்களினூடாக வென்றெடுக்கப்பட வேண்டிய அரசியல் ரீதியானதும் சட்டரீதியான துமான உரிமை ஆகும். லயன் அறைகளிலும் குவார்ட்டஸ்களிலும் 2-1/2, 7, 10 பேர்ச் காணிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளிலும் மாடி வீடுகளிலும் வசிப்போருக்கு அவை சொந்தமாக காணி உறுதிகள் வழங்கப்பட வேண்டும். அக்குடியி ருப்புக்கள் கிராமக் குடியேற்றங்களாக அங்கீகரிக்கப்பட்டு, கிராமக் குடியேற்றங்களுக்குரிய நீர், மின்சாரம், நூலகம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அவர்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும்.

அத்துடன் 2003ஆம் ஆண்டு அமைச்சரவை முடிவின்படி ஒரு தோட்டத் தொழிலாளரின் குடும்பமொன்றுக்கு 20 பேர்ச் காணி வழங்கப்பட வேண்டும்.

இவற்றை வென்றெடுக்க இதுவரை தொழிற்சங்க வாதிகளும், பாராளுமன்ற வாதிகளும், என்.ஜி.ஓ காரர்களும் செய்துவரும் ஏமாற்று வித்தைகளையன்றி அர்த்தமுள்ள அரசியல் நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட வேண்டும். ■

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று15 ஒக்டோபர் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 96

## இந்துத்துவ நீதி?

இந்து நாடு என்று சொல்லப்படுகின்ற நேபாளத்திலிருந்து நேபாள பெண்களை இந்தியாவுக்கு கடத்திக் கொண்டு வந்து இந்திய பாதாள உலக குற்றவாளிகள் அவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவ்வாறு மாதமொன்றுக்கு கடத்தப்படும் பெண்களின் எண்ணிக்கை 5 ஆயிரம் என்று கூறப்படுகிறது. இதுதான் 'இந்துத்துவ நீதியா'?

# காட்டேரிகளின் காட்டுமிராண்டித்தனம்



பொத்துவில் இரத்தல் குளத்தில் அப்பாவி முஸ்லிம் மக்கள் வெட்டி கொல்லப்பட்டுள்ளனர். அதற்கு காரணம் பொலிஸ் அதிரடிப்படையே என்றுமக்கள் கூறினர் ; அதிரடிப் படையினருக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களும் சுடப்பட்டார்கள். பேரினவாதத்திற்கும் முஸ்லிம் மக்களுக்கமிடையேயான முரண்பாட்டை மறைத்து தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வை முஸ்லிம் மக்களிடம் வளர்த்து அரசியல் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் சில முஸ்லிம் தலைவர்கள் மௌனிகளாகிவிட்டனர்.

அக்கொலைகள் பற்றி சர்வதேச விசாரணைக் குழு விசாரணை செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தை கேட்டார். அதனை நிராகரித்த அரசாங்கம் அக் கொலைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே செய்தது என்று காட்டுவதற்கு முயற்சிகளை எடுத்து வருகிறது.



அதிரடிப்படையினர் மீது ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியதால் அவருக்கு வழங்கப்பட்டிருந்த அதிரடிப்படை பாதுகாப்பை அரசாங்கம் விலக்கிக் கொண்டுள்ளது.

பொத்துவிலில் அமைக்கப் பட்டுள்ள அதிரடிப்படை முகாம் பொத்துவில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. பொத்துவிலுக்குள் யாராவது புதியவர்கள் வந்துவிட்டால் அதிரடிப்படை முகாமிற்கு தெரியாது இருக்க முடியாது. அந்தளவுக்கு அம் முகாம் கடுமையானது. பெத்துவிலில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே விவசாயத்திற்கான நீர் விநியோகத்தில் தொடர்ந்து சர்ச்சை இருந்தது. அச்சர்ச்சையில் அதிரடிப்படையினர் முஸ்லிம் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடந்துகொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதனால் முஸ்லிம் மக்களுக்கும் அதிரடிப்படை முகாம் வீரர்களுக்கும் தொடர்ந்தும் பிரச்சினை இருந்தன. அதன் விளைவாக முஸ்லிம் மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாவிலாறு பிரச்சினையில் விவசாயிகளுக்கான நீர் விநியோகத்தை புலிகள் இயக்கம் தடை செய்துவிட்டதாக கண்டனம் செய்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எம்.பியான நீர்ப்பாசன பிரதியமைச்சர் பொத்துவில் முஸ்லிம் மக்களுக்கிருந்த நீர்ப்பிரச்சினை பற்றி ஒரு போதும் கதைக்கவேயில்லை.

சில முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமிழ் மேலாதிக்கத் தவறுகள் பற்றி பேசும் போது அதைவிட பயங்கரமான பேரினவாதம் பற்றிப் பேசாமல் இருந்து விடுகின்றனர். அவர்களின் ஆடம்பரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் அவர்கள் அரசாங்கங்களுடன் இணைந்து கொள்வதற்கும் பேரினவாதத்தை விமர்சிப்பதில்லை.

அதேபோன்று மூதூரில் கொல்லப்பட்டவர்களுக்கு நட்டஈடாக வழங்கப்பட்ட தலா ரூபா 15 ஆயிரத்தை முஸ்லிம் மக்கள் வாங்கவில்லை. அந்த நட்டஈடு வெறும் கண்துடைப்பாவதுடன் பாராபட்சமுமாகும் என்று முஸ்லிம் மக்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். நட்டஈடு வழங்குவதற்காக அரசாங்கம் நடத்திய கூட்டத்தையும் முஸ்லிம் மக்கள் குழப்பியுள்ளனர்.

இவையெல்லாம் பேரினவாதத்திற்கு எதிராக சாதாரண முஸ்லிம் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளாகும். இவற்றை தலைவர்கள் தொடர்ந்து மறைத்துக் கொண்டிருக்க முடியாது. பேரினவாதத்திற்கு எதிரான முஸ்லிம் மக்களின் உணர்விற்கும் போராட்டங்களுக்கும் நேர்மையான தலைமைத்துவம் அவசியம்.



## ஜே.வி.பியின் வீழ்ச்சி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து ஜே.வி.பி விலகிக் கொள்ளும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பியை விலத்தி வைக்கும் ராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட எண்ணம் கொண்டுள்ளது. ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாலியல் தொழிலை நடத்தும் கட்சி என சாடியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களும், மலையக மக்கள் முன்னணி உறுப்பிர்களும் அரசாங்கத்துடன் இணைந்திருப்பதால் அவர் அக்கருத்தைத் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி சமர்ப்பித்த 20 அம்ச கோரிக்கையை சதந்திரக்கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதாலும் அவருக்கு கோபமாக இருக்கலாம்.

அத்துடன் ஜே.வி.பியின் பிரதான தலைவர்களில் ஒருவரான நந்தன குணதிலக்க ஜே.வி.பியிலிருந்து விலகிவிட்டார். சுதந்திரக் கட்சியில் இணையப் போகிறார். அமைச்சராகப் போகிறார் என்ற கதையும் அடிபடுகிறது. இதனால் ஜே.வி.பியின் ஸ்தாபன பலத்தில் பாதிப்பு ஏற்படலாம். முதலாளித்துவ கட்சிகளுடன் இணைந்து கொண்டு ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுப்பவை மாக்சிய கட்சிகளாக இருக்க முடியாது. அதிலும் தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட கட்சி ஒருபோதும் மாக்சிய கட்சியாக இருக்க முடியாது.

பாரம்பரிய கட்சிகள் போன்று ஜே.வி.பியும் அதே அரசியல் பயணத்தை தொடர்ந்து, வெகு சீக்கிரத்திலேயே அம்பலப்பட்டுவிட்டது. முதலாளித்துவ வாதிகள் ஜே.வி.பி போன்றவற்றின் தவறுகளை மாக்சியத்தின் தவறென பிரசாரம் செய்கின்றனர். தமிழ் தேசியவாதிகளோ ஜே.வி.பி மாக்சிய கட்சியல்ல, இடதுசாரி கட்சியல்ல என்று அதன் தலைவர்கள் கூறினாலும் விட்டுவைக்கப் போவதில்லை. ஏனெனில் அவர்களுக்கும் இடதுசாரிக் காய்ச்சல். அவர்களின் பின்னடைவுகள், காட்டிக் கொடுப்புகள் எவ்வளவுதான் இருந்த போதும் அவர்கள் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை.

ஜே.வி.பிக்குள் ஏற்பட்டுள்ள பிளவால் ஜே.வி.பி பலவீனமாகும். ஜே.வி.பியை நம்பி அதில் சேர்ந்துள்ளவர்கள் அதன் மக்கள் விரோத தலைமைகளை நிராகரித்துவிட்டு மாற்று அரசியல் நடவடிக்கைகள் பற்றி யோசிப்பதற்கும் வாய்ப்பேற்படும். போலியான இடதுசாரிகளிடையேயான குழப்பமும், அவர்களின் வீழ்ச்சியும் நேர்மையான இடதுசாரி சக்திகளுக்கு வாய்ப்பைத் தேடிக் கொடுக்கும்.

ஆகக்குறைந்தது ஏகாதிபத்திய உலகமயமாதல் மீதான எதிர்ப்பு, இரண்டு பிரதான கட்சிகள் மீதான எதிர்ப்பு, பேரினவாத எதிர்ப்பு போன்றவற்றுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்திற்கு ஆதரவுமாவது இடதுசாரி இயக்கத்தில் காணப்படாவிட்டால் அது இடதுசாரி இயக்கமா?

ஜே.வி.பி மாக்சிய கட்சியுமல்ல. இடதுசாரி கட்சியுமல்ல. அதுபற்றி உண்மை தெரியட்டும்.

## தமிழ் வைத்தியருக்கே இக்கதியெனில்..?

இன்றைய யுத்த சூழ்நிலையால் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல அதற்கு வெளியில் வாழும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளது.

இராணுவம், பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பேரிலான சோதனைகளும், கைதுகளும், கடத்தல்களும், காணாமல் போதலும் நாளாந்த நிகழ்வுகளாகியுள்ளன.

அத்துடன் பேரினவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கும் தொந்தரவுகளுக்கும் தமிழ்க் குடும்பங்களிள் முகம் கொடுத்து வருகின்றன.

பொரளைப் பகுதியிலுள்ள தொடர்மாடி வீட்டில் வசித்துவரும் கொழும்பு தேசியவைத்தியசாலையில் தொழில் புரியும் மலையகத் தமிழ் வைத்திய குடும்பத்தை அத்தொடர்மாடி வீட்டிலிருந்து வெளியேறும்படி காடையர் கூட்டமொன்று அச்சுறுத்தியுள்ளது. குறிப்பிட்ட வைத்தியர் இரவுக் கடமைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்றிருந்த வேளையில் அவரது வீட்டிற்குச் சென்ற அக்காடையர் கூட்டம் அவரது மனைவியையும் சிறு பிள்ளைகளையும் அச்சுறுத்தியுள்ளனர்.

அவர்கள் அங்கிருப்பது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கூறிய காடையர் கூட்டம் அவர்களை அங்கிருந்து வெளியேறும்படி கூறியுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் சாதாரண தமிழ் மக்களுக்கு யார்பாதுகாப்பு அளிப்பது?

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு கொம்பிரின்ட், 334பு.மு.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்